குமரகுருபரன்



மலர் 16] 1965-௵ பங்குனி மீ 1 ௳ (14-3-65) [இதழ் 3

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ 1½

உள்ளுறை

பக்கம்

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16 | குரோதி-ஹூ பங்குனி திங்கள் 1-ம்வ [14-3-65] | இதழ் 3

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 11)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

சைவத்தில் பரமேசுவரிக்கு உலகுடையாள், உலகநாயகி, ஜகதம்பிகை, உலகமாதா என்பன முதலிய பல பெயர் வழங்கி வருதல் யாவரும் அறிந்ததே. படைப்பு முதலிய தொழிலைந்தும் அறிவால் ஆவனவே என்னும் உண்மையை உணர்ந்தவர்க்கு இதன் விளக்கம் இனிதுண்டாகும். ஏனையோர் இதனை உணர்வது அரிதே. உலகெல்லாம் அறிவால் உளவாக்கப்பட்டவையே. அறிவே எவற்றையும் தோற்றுகின்றது, நிலைபெறச் செய்கின்றது, அழிக்கின்றது, மறைக்கின்றது உயிரை. அருள்

கின்றது உயிர்க்கு. இவ்வைந் தொழிலும் கடவுளதறிவு, நேரே, தானே செய்வதும், பிறவுயிர்களை இடமாகக் கொண்டு செய்வதும் என்று இருவகைத்து. தானே செய்யும்போது சங்கற்பத்தாற் செய்வதும் பிறவுயிர்களை அதிட்டித்துச் செய்யும்போது அச்சங்கற்பத்தொடு சாதனத்தாற் செய்வதும் ஆகும். நான்முகன் படைப்பதாகக் கொள்ளின், அவன் சங்கற்பமும் சாதனமும் உற்று அத்தொழிலைச் செய்கின்றான். அவனை அதிட்டித்துச் செய்யும் கடவுள் (இயவுள்) சங்கற்ப மாத்திரத்தாற் செய்கின்றார். அவ்வியவுள் அந் நான்முகனது உயிருள், அந்தர்யாமியாக இருந்து செய்வதை நாம் நமக்குள் அந்தர்யாமியாக இருந்து செய்துவரும் இயவுளது அருளை (உள்ளொளியை)க் கொண்டு நிச்சயஞ் செய்து கொள்ளக்கடவோம். இவ்வாறே ஏனையிருவர் (விட்டுணு, உருத்திரன்) இடத்திலும் மகேசுரரிடத்திலும் அவ்வியவுள் இருந்து நடாத்துகின்றார். இரண்டும் பிறவினையே யாயினும் நடத்துவதும் நடாத்துவதும் ஒன்றல்ல. நம் முன்னோர் ஆட்சியால் இதை உணர்க.

ஈண்டுப் புலவர் பலர் விரும்பும் ஒன்றனை வெளியிட விருப்பம். 'குமரகுருபரன்' புலவர் பற்பலரைக் களிப்பிக்கின்றான். சிற்சிலர் இதில்உள்ள இலக்கணக் குறிப்பை நோக்கி மகிழ்ந்து எழுதுகின்றனர். அவருள் ஒருவர் திரு. க. வா. சச்சிதாநந்தம் பிள்ளை என்பவர் 1-2-65இல் நேரில்வந்தும் தம் களிப்பை வெளியிட்டார்.

அளபெடையாற் பிறவினை யாக்கும் முறையும் தமிழ்க்கு உண்டு. தொல்காப்பியர் "கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை" என்றும் அம்மாத்திரையின் நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி* யெழூஉதல் என்மனார் புலவர்" என்றும் உணர்த்தினர். அதில் 'எழூஉதல்' என்பது 'எழுப்புக' என்னும் பொருளைத் தருதல் அறிக. அது படர்க்கைக்கேயுரிய வியங்கோள் வினை. பிற்காலத்தார் வியங்கோளை மூவிடத்திற்கும் கொண்டனர். தொல்காப்பியர், "அவற்றுள் தன்மை முன்னிலை ஆயிரிடத் தொடு மன்னாதாகும் வியங்கோட் கிளவி" (226) என்று அறுதியிட்டுறுதி கூறியும், பிற்காலத்தார் செய்த பிழையால்,

---

* 'சாத்தன் யாழ் எழூஉம்; (தொல், சொல்-173. உரை)

இக்காலத்திற் பள்ளிப் பாடத்தில் முன்னிலை ஏவற்கும் வியங்கோட்கும் வேறுபாடு ஏறுவதாயிற்று. சேனாவரையர், அச் சூத்திரவுரைக்கண் "தன்மைக் கண் ஏவல் இல்லை. முன்னிலைக்கண் ஏவல் வருவதுண்டேற் கண்டு கொள்க" என்றெழுதினார். அச் சூத்திரத்திற்கு முன் (222) உள்ள 'இருதிணைச் சொற்கும் ஓரன்ன வுரிமைய' வற்றை உணர்த்தும் சூத்திரத்தின் உரைக்கண், வைப்பு முறைக் காரணம்கூறும் இடத்தில். "ஏவற் பொருண்மை முன்னிலை வினைக்கண்ணும் உண்மையிற் பொருளியை புடைத் தாகலானும் இடங்குறித்து முற்றாய் வருத லொப்புமை யானும் அதன் (முன்னிலையின்) பின் வியங்கோள் வைத்தார்" என்றுரைத்தார். அச் சூத்திரத்திற் கூறிய எட்டனையும் விளக்கிய வழி, 'முன்னிலை வினைச்சொல்லாவது எதிர்முகமாய் நின்றான் தொழிலுணர்த்துவது' என்றும் 'வியங்கோள் ஏவற்பொருட்டாய் வருவது' என்றும் எழுதியதும் அறிக. தொல்காப்பியர் எழுத்தில், "ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி" (210) என்றாரேயன்றி 'ஏவல்' என்றாரல்லர். "செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொற் செய்யென் கிளவி யாகிட னுடைத்தே" (450) என்றதிலும் 'ஏவல்' என்று சொன்னாரல்லர்; முன்னிலை வினைச் சொல்லெல்லாம் ஏவலாய் வாராமையான்; ஒரு வினைச்சொல்லடி வினைக்கும் ஏவற்கும் பொதுவாகும். ஆதலை யுணர்ந்த சங்கர நமச்சிவாயப் புலவர் 'செய்யென் னேவல் வினைப்பகாப் பதமே' என்றதன் உரையில், ஏவற் பகாப்பதம் வினைப்பகாப்பதம் என்று இரண்டாகக் கூறி வேறுபாடு விளக்கிய திறம் இங்கு நோக்கத் தக்கது. வியம்-ஏவல். வியங்கோள் – ஏவற்கோள். ஏவற்கும் ஏவற்கோளுக்கும் வேறுபாடுண்டு. 'நீ செல்' என்பது ஏவல். 'அவன் செல்க' என்பது ஏவற்கோள் தொல்-சொல், 225. இவ் 'எஞ்சிய கிளவி' என்றவை, சூ.222-இல் உள்ள எட்டில். முன்னிலை அல்லாத ஏழும் ஆகும். ஏழும் 'ஐம் பாற்குமுரிய' என்று பெறப்பட்டமையால், வியங்கோள் ஐம் பாற்குமுரிய என்பது மீண்டும் கூறல் வேண்டா. வேண்டா திருந்தும் ஆசிரியர் ஏன் 226 ஆவது சூத்திரம் கூறினார்' மூவிடத்திலும் வியங்கோள்வரும் என்று கொள்ளும் நிலையில் 225 ஆவது சூத்திரம் அமைந்ததால், அம் மூவிடத்துட் படர்க்கைக்கே வியங்கோள் உரியது என்பதை விளக்கவும் முன்னிலை தன்மைக்கு உரியன அல்ல என விளக்கவும் நேர்ந்தார் ஆசிரியர்,

புறநானூற்றுப் பாடல் (72) ஒன்று 'எழூஉதல்' என்பது போன்று ஒரு சொல் நின்று பிறவினைப் பொருள் பயத்தல் காண்க. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டில் அச்சொல் அமைந்துளது.

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவன்என உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம்என்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின், பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன் எம்இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக என்நிலவரை;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே",

இதில் 'அகப்படேஎன்' என்றதன் பொருளாக உரையாசிரியர் (அவரைக்) 'கைக்கொண்டிலேன்' என்று உரைத்தார். படேன் எனத் தன்வினைப் பொருள்கொள்ளாது படுத்தேன்(படுத்திடேன்) எனப் பிறவினைப் பொருள் கொண்டு உரைத்தமை நோக்குக. 'அகப்படேஎன் ஆயின்' என்றது என அச்சொல்நின்ற தொடரைக் காட்டி, அச்சொல் ஈண்டுப் பிறவினைமேல் நின்றது' என்றும் எழுதினர், அதன் பின்னர் 'வேந்தரைத் தாக்கி அகப்படேனாயின்' என்றுள்ளதில் அளபெடை இல்லாதது பிழை. 'எழூஉதல்' 'படேஎன்' என்று அளபெடையின்றேல், அவை எழுதல் படேன் எனத் தன்வினைப் பொருளே பயக்கும். புறநானூற்றுரையில் அது பிழை அல்லதெனில், அவ்வுரையாசிரியர் 'படேன்' என்றதே

பிறவினைப் பொருளில் நின்றது என்றும் அளபெடை இசை நிறைத்து நின்றது என்றும் கொண்டவராவார். ஆனால், எழு உதல் என்றதுபோல்வது அன்று 'படேஎன்' என்பது. ஆசிரியர் 'படேன்' என்று நிறுத்திய வராயின் அதைப் பிறவினைச் சொல்லாக நிறுத்த வல்லவரல்லரோ? இசைகுறையுமாறு தன் வினைச் சொல்லை நிறுத்தி, அச்சீரின் இசையை நிறைக்க அளபெடை யுறுத்துவ தெற்றுக்கு? இங்குச் சீர்இசைநிறைக்க நிறுத்திய தாயின், பிற இடங்களில் அளபெடை நிறுத்தியவாறு என்னே?

'துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொலவர்க்கு'

என்னுந்திருக்குறளில் அளபெடையை நீக்கினும் இசை கெடா மையும் ஆண்டு அளபெடை இன்றியமையாமையும் அறியற் பாலன. உறுதல் - மிகுதல். "அவைதாம், உறுதவநனி யென வரூஉம் மூன்றும் மிகுதி செய்யும் பொருள என்ப" என்பது தொல்காப்பியம். பரிமேலழகர், 'இன்பத்தை மிகுவிக்கும் இன் சொல்லையுடையார்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லை யாம்' எனவுரையிலும் 'யார் மாட்டும் இன்புறூஉம் இன்சொல்வர்க்குப் பகையும் நொதுமலும் இன்றி உள்ளது நண்பேயாம், ஆகவே அவர் எல்லாச் செல்வமும் எய்துவர் என்பது கருத்து என விரித்துரையிலும் எழுதினர். இங்கு ஈரிடத்திலும் அளபெடையுள்ள வாறே புறநானூற்றுரையிலும் ஈரிடத்தும் அஃது இருத்தற் பாலது. இல்லாமையாற் பிழையேயாம். 'போஒய்ப் பெறுவது' "தெய்வந் தொழாஅள்' என்பவை முதலிய இடங்களில் நின்ற இசைநிறையள பெடை போல்வன அல்ல யாம் குறித்தவை. நீட்டம் வேண்டின், கூடியெழுமோ? கூட்டியெழுப்புவரோ? வேந்தரை அகப்படுத்தேன் என்பதா? வேந்தரை அகப்படேன் என்பதா? துவ்வாமை துன்புறுத்துமா? துன்புறுமா? இன்சொல் இன்புறுத்துமா? இன்புறுமா?

"அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை"

என்றதிலும் அளபெடைப்பயனை அறிக. 'தீதொரீஇநன்றின்பாலுய்ப் பது'' உலகந்தழீஇயது' முதலியவற்றின் கண்ணும் அறியலாம். இது

வரையிலும் எழுதிய வற்ருல் அறியக்கிடப்பது இது:—நடாத்து வது நடத்துவது இரண்டனையும் ஆளும் இடம் வெவ்வேறு என்பதே. கடவுள் நடாத்துவார் எனல் வேண்டும். நடத்துவார் எனின், சாதனசிருட்டி என்ருகிக் குற்றமாம். நம் அம்மை உலகெலாம் படைக்குமாறு இது:—

சிவன் தன்கண் உள்ள சிவசக்தியைப் புறப்படுத்துவான். சிவசக்தி திரோதாயருபமாய் நின்று, தன்கண் அடங்கும் காரணமாயையிலிருந்து காரியப்படுங் கலையைந்தனையும் தோற்றும். அவ்வைந்து கலைகளும் தம்முள் அடங்கும் தத்துவம் முதலிய ஐந்தனையும் வெளிப்படுத்தும். (1) முப்பத்தாறு தத் துவம், (2) இருநூற்றிருபத்துநான்கு புவனம், (3) ஐம்பத்தோ ரெழுத்து, (4) எண்பத்தொன்றுபதம் (5) பதினொன்றுமந்திரம், (6) ஐந்துகலை எனப்படும் (வழி) ஆறும், உயிர்கள் ஒவ்வொன் ருகக் கழித்துக் கொண்டு சிவபதத்திற், செல்வதற்கு வழி போலுதலால் வழி (அத்துவா) எனப்பட்டன. அவ்வத்துவா ஆறும் சத்தியின் படைப்பே யாகும். ஆதலின் அச் சத்தியே ஜகதம்பா, லோகநாயகி, புவநேசுவரி முதலிய பலபல பெயராற் போற்றப் பெறும் முதல்வியாகின்ருள். அண்டங்கள் எல்லா வற்றையும் படைத்துக் காத்து ஒடுக்கியருள்வது அவளுக்கு ஒரு விளையாட்டு. இதனை அங்கயற் கண்ணியம்மை பிள்ளைத் தமிழிலே செங்கீரைப் பருவத்திலே, சுற்று நெடுநேமிச் சுவர்' எனத் தொடங்கும் பாடலிலே சிற்றில் விளையாட்டென இவ்வாசிரியர் மிக்க அழகியதாகப் பாடியருளிவாறு அறிக. அங்கையற் கண்ணி யம்மை குறத்திலும்

"வைத்த பகிரண்டமேனும் மணற்சிற்றில் இழைத்திழைத்தோர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே"

என்று பாடியருளினுர்.

ஆசிரியர் மீனுட்சி என்ருளாது 'அங்கயற் கண்ணி' என்று பல இடத்திலும் ஆண்டார். 'கார்' என்னும் மங்கல மொழிமுதல் வகுத்துக் கொண்டு பாடியுள்ளார். அம்மொழி 'மீனுட்சி' என்னும் பெயர்க்கு மரணப் பொருத்தம் ஆவது. ஆதலால், 'அங்கயற் கண்ணியம்மை பிள்ளைத்தமிழ், குறம் என்றே அவ்விருநூலுக்கும்

பெயரிட்ட உண்மையை அறியலாம். 'மணி' என்னும் மங்கலச் சொல்லைக் கொண்டு தொடங்கியதால் அங்கயற் கண்ணியம் மைக்கும் பொருந்தும்; மதுரைக்கும் பொருந்தும். அதனால் மதுரைக் கலம்பகத்தைக் குறித்து இவ்வாராய்ச்சி வேண்டா. கலம்பகம் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் கச்சிக் கலம்பகம். திருவருணைக் கலம்பகம் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், காசிக்கலம்பகம் என்பன போலப் பாட்டுடைத் தலை வனது ஊர்ப்பெயரால் வழங்குதல் பெரும்பான்மை. 'அழகர் கலம்பகம்' என்பது போலப் பாட்டுடைத் தலைவன் பெயரால் வழங்குதலும் உண்டு.

உலகெலாம் தோற்றியருளிய பெருமாட்டி; (இச்சொல்) தவறான முறையில் அமைந்தது. பெருமகன் பெருமகள் என்பன பெருமான் பெருமாள் எனமருவின. ஸ்ரீமாந், ஸ்ரீமதி என்பன சீமான் சீமாட்டி என வழங்குகின்றன. மகன், மகள் இரண்டும் மான்மாள் என மருவியமை அறியாது இறுதிநிலை (விகுதி)யாகக் கொண்டு இப்படி ஆக்கிவிட்டனர். மலையன் மகன்–மலையமான். சேரன் மகன் சேரமான். இவ்வுண்மையுணராது இம்மானையும் மாளையும் இறுதி நிலையாகக் கொண்டுரைத்தனர். அவ்வாறு கொண்டாலும் கொள்ளட்டும். ஆனீறாகக் கொண்டது பொருந் துமோ? கோமான் (கோமகன்) பெருமான் (பெருமகன்) வேள் மாள் (வேண்மகள்) என்பவற்றில் உள்ள 'மா' 'ஆ' ஆமோ? சேனாவரையரும் விளிமரபில் (15) 'ஆன்' என் இறுதி இயற்கையாகும் என்றதனுரையில், 'சேரன்மான் மலையமான் என்பன கூவுதற் கண்ணும்' அவ்வாறு நிற்றல் காண்க 'என்றார், சேரம் மலையம் என்று கொண்டு, 'ஆன்' என்று பிரித்தால் தானே அவ்வாறு நிற்கும்? சோழம் பாண்டியம் என்று நிறுத்தி 'ஆன்' எனச் சேர்த்துச் சோழமான் பாண்டியமான் என வழங்காமை என்னையோ? அவ்வாறு வழங்க எவரும் விரும்பினாரல்லர்போலும். தொண்டைமான், வேண்மான், அதிகைமான் அதியமான்? நெடு மான் (அஞ்சி), முதலியவற்றில் ஆனீறு அமையுமோ? மதுரைக் கணக்காயனார் மகன், பெருங்கோழி நாயகன் மகன் நற்கண்ணை யார், ஓய் மான் முதலியவற்றை ஆராய்க. மகர் மகார் என்பன மார் எனத்திரிந்தமையும் மாரீறு கொண்டமையும் காண்க. பிள்ளைமார், செட்டிமார், ஐயன்மார், குருக்கள்மார் முதலியன

இன்றுமுள்ள வழக்கு. மாறு வினை கொண்டு முடிவது இதனுல் அன்ருே? புலவர்க்கு விருந்தாதற் பொருட்டு இவ்வளவும் எழுது வது ஆதலின் இது குற்றமன்று.

"வன்னஞ் செறிவளைக் கைச்சிற காலத்தன் வயிற்றினுள்வைத்
தின்னஞ் சராசர ஈர்ங்குஞ் சனைத்திரை தேர்ந்தருத்திப்
பொன்னம் பலத்துள்ஓர் ஆனந்த வாரிபுக் காடும்பச்சை
யன்னம் பயந்தன கொல்லாம் பல்லாயிர வண்டமுமே."

இப்பாடலைப் பத்துமுறை யேனும் பயிரவி முதலிய இராகத்தோடு பாடிப் பயின்றபின் எய்தும் ஆநந்த அநுபவம் ஒருமுறை சில முறை படித்தால் எய்தாது.

வன்னம்:- 'வர்ணம்' என்னும் வடசொற்றிரிபு. 'தொந்த முறும் வன்னமே தோக்கு' என்பது கந்தர்கலிவெண்பா, 'வர்ணம்':- நிறம். நிறத்தால் தோன்றும் அழகு முதலிய பொருள் உடை யது. செறிவளை:- வினைத்தொகை. வளைக்கை-வளையலணிந்த கை. (1) கையைச் சிறகு ஆகவும் (2) வயிற்றைக் கூடாகவும் (3) சராசரங்களைக் குஞ்சுகளாகவும், (4) சிவகாமி யம்மையை அன்னமாகவும், (6) சராசரங்களுக்கு இடமாகிய அண்டங்களை (உலகங்களை) அண்டங்கள் (முட்டைகள்) ஆகவும், (7) பொன் னம்பலவாணரை ஆநந்த நடராசரை அச்சிவகாம வல்லியாகிய அன்னம் புகுந்தாடும் நீர் வெள்ளமாகவும் உருவகப்படுத்திய அழகைப் பல முறையும் பாடிப் பாடி நாம் ஆநந்தாநுபவம் அடையக் கடவோம். பச்சை யன்னம்-சிவகாமி யம்மை. வெள் ளன்னம், செவ்வன்னம் எல்லாம் உலகன்னமும் உணவன்னமு மாம். சரம்:- இயங்குதிணை. அசரம்:- நிலைத்திணை. இரை:- தநுகரணத்தோடு சார்த்திச் சொல்லும் போகமாகிய சாதனங் களால் அநுபவிக்கும் இன்பத் துன்பங்கள். தெரிதல் - தேர்தல் (மரூஉ). தேர்ந்து-உயிர்களின் வினைக்குத் தக்க பயனைத் தெரிந்து அருத்த அருந்துதல் - இன்பத் துன்ப நுகர்ச்சி. அண்டம்:- உலகம், முட்டை. (சிலேடை). பயந்தன-ஈனப்பட்டன. ஈனுதல் அஃறிணைக்கே உரியது. 'ஈன்றபொழுது'என்று சொல்லித் தேவரும் பிழைத்தார் எனின் மக்கள் பிழைத்தற்கு 'ஒருவந்தம்' உண்டோ? 'கம்' என்ருதல் 'ஒரு முடிபு'என்ருதல் சொல்லலாம். ஏகமுடிபு எனலாமோ? 'ஒரந்தம்' என்ருவது நன்று. ஒருவாறு

என்பதைப் போல்வது. 'ஒருவந்தம்' என்பது 'திருவடி' என்பதைப் போல்வது அன்று. ஒரு(மை) என்பது உயிர்முதன் மொழியுடன் சேருங்கால் ஓர் என்றுகும்.

'முதனிலை யெண்ணின் முன்' (தொல், எழுத்து. குற். புண. 73.)
அதனிலை யுயிர்க்கும் யாவருகாலை
முதனிலை யொகரம் ஓவா கும்மே
ரகரத் துகரம் துவரக் கெடுமே.' 74

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் பொருளை உணர்க.

அதனுல், ஓரடை, ஓராண்டு, ஓரிலை, ஓரீறு, ஓருலகு, ஓரூர், ஒரெருது, ஓரேர், ஓரையம், ஓரொருகால், ஓரோடை, ஓரௌவியம் என வருதல் உலகியலும் செய்யுளியலுமாகும். ஓரந்தம் என்னுது 'ஒருவந்தம்' என்றது பாவலார்க்குள்ள விதிவிலக்கே எனலாம். ஒருமை (யெண்ணு)க் குரியவாறே இருமைக்கு முரியவாம் இத் திறத்தில் மட்டும்.

(தொடரும்)

இராகம் : இராகமாலிகை   தாளம் : ஆதி.

(ஆனந்த பயிரவி, ரஞ்சனி, பாகேஸ்ரீ)

பல்லவி

என் ஐயனே உனக்கு இரக்கமுமில்லையோ
வன்மமும் ஏதென்று என்னிடம் சொல்லையா (என்)

அனுபல்லவி

உன்னைச்சதா பாடியும் இன்னல் படலாமா
நின்னைத் தினம் துதித்தும் துன்பம் தரலாமா (என்)

சரணங்கள்

வந்தது போதாதோ கவலைகள் தீராதோ
பந்த வினைகள் போக்கி பாவங்கள் தொலையாதோ
நிந்தனை செய்துபலர் ஏளனம் பேசிட
இந்த விதமேன் செய்தாய் ஈசுவரனேகுகனே (என்)

ஆவி பிரியும்வரை அத்தனை வேதனையோ
பாவி படுந்துயரம் பார்க்க ஏன்சாதனையோ
புவியில் பலபிறவி எடுத்தும் பலனில்லையோ
தவிக்கும் என்மேல் இரங்கித்தடுக்க மனமில்லையோ. (என்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 2-ன் தொடர்ச்சி

குரு பூசனையே சன்மார்க்கம்

Guru Adoration is Sanmarga

61. தெரிசிக்கக், பூசிக்க, சிந்தனை செய்யப்
பரிசிக்கக், கீர்த்திக்கப், பாதுகஞ்சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கம் தானே.

To see him, to adore him, to meditate on him
To touch him, to sing of him in praise,
To bear his holy feet on the humbled head,
–They that render devotion to Guru in diverse ways thus,
They indeed walk the Sanmarga's path
That to salvation leadeth.

குரு பக்தியே சன்மார்க்க நெறியின் உயிர்ப்பு. குருவைத் தரிசித்தலும், பூசித்தலும், நினைத்தலும், தொடலும், வாழ்த்தலும், திருவடி முடிமேல் தாங்குதலும் - ஆகிய செயல்கள் செய்தல் குருபக்தியாகும். அங்ஙனம் பத்தி செய்வோர் முத்திக்குப் பக்குவராகுகின்றார்.

சன்மார்க்கமே தெளிந்த ஞானத்தைத் தரவல்லது

Sanmarga gives the Vision True

62. தெளி வறியாதார் சிவனை யறியார்
தெளி வறியாதார் சீவனு மாகார்
தெளி வறியாதார் சிவமாக மாட்டார்
தெளி வறியாதார் தீரார் பிறப்பே.

They that hath true Vision none,
Shall never Siva Know;
Nor shall ever Jeevas be:
Nor indeed Siva become;
Never, never their birth's bondage broken be.

சன்மார்க்க நெறியால் வரும் பதிஞானம் பெருதவர் சிவனை அறிய மாட்டார். ஆன்ம விளக்கமும் பெருர்; தானே சிவமாகும் நிலையையும் அடைய மாட்டார்; பிறப்பினை அறுக்கவும் ஆகார்.

சன்மார்க்கம் ஞானுனுபூதியை அளிக்க வல்லது

Sanmarga leadeth to Supreme Grace - Bliss

63. தானவனுகித் தானைந்தா மலஞ்செற்று
மோனமதா மொழிப்பான் முத்தராவதும்,
ஈனமில் ஞானுனுபூதியில் இன்பமும்,
தானவனுய் உறலான சன்மார்க்கமே.

When thou scotchest the impurities five
And listenth to the Voice of Silence[1]
Thou a pure Mukhta becometh;
And I and thou in one mergeth
And in the unsullied Grace, Gnana granteth
Thou shalt joy of the Bliss Divine;
Verily, theirs by the Path of Sanmarga
Thou indeed shalt become He.

சன்மார்க்க நெறியினைக் கடைப்பிடிப்போர்கள், ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து குற்றங்களையும் கெடுவித்து, மோன நிலையில் எழும் ஊமை ஒலியைக் கேட்க, முத்தராகி, பின் தாமே சிவமாகின்றார்கள். மாசற்ற ஞான அருளின் பேரின்பத்தைப் பெறுகின்றனர். பசுத்துவம் நீங்க, பதித்துவம் அடைகின்றார்கள்.

வரி-2 மொழிப்பான்-மொழியான். பொழி, பொழிப்பென்றாற்போல, மொழி மொழிப்பாயது.

"மோனங்கை வந்து ஊமை மொழி முற்றுங்காண்" என்று பின்னே ஆறுந்தந்திரத்துள்ளும் (பாட்டு. 1611) கூறியது காண்க. இங்கு அஜபை அல்லது ஜபிக்க வொண்ணாத, மூலமந்திரமாம் ஓம் என்பதைக் குறித்தது இது காதுகளுக்குக் கேட்கப்படாது, மோன நிலையில் உணர்வினுக்கு மட்டும் கேட்கப்படுவது.

[1] Voice of Silence or Mona is what Pythagoras called 'Harmony of the Sphere's, beyond words and forms-the experience of the infinite within us. vide Foundations of Tibetan Myticism by Lama Angarika Govinda-Part I. (Rider & co. London, 1959)

சன்மார்க்கத்தார் பெறுவது

What the Sanmargis attain

64. சன்மார்க்கத்தார்க்கு முகத்தொடு பீடமும்,
சன்மார்க்கத்தார்க்கும் இடத்தொடு தெய்வமும்,
சன்மார்க்கத்தார்க்கு வருக்கம் தரிசனம்
எம்மார்க்கத்தார்க்கும் இயம்புவன் கேண்மினே!

For Sanmargis is given
The Visage of Siva and the Pedestal of Sakti
–The Nada and the Bindu primordial;
For them is the Space Infinite and Divinity Exalted
–The Sakti and Siva States Supreme,
For them is the Vision Cosmic,
–The Material and Immaterial tatuas at once.
This I proclaim, to what soever path thou doth incline to.

சன்மார்க்கமாம் ஞானநெறியினைப் பின்பற்றுவோர் சிவ லிங்க முகத்தினையும், சக்தி பீடத்தினையும் எய்துகின்றனர்; சிவத்தின் பர வெளியையும், தெய்வத்தன்மையையும் கொள் கின்றனர். சுத்த அசுத்த மாயா புவனங்களைக் காட்சியாகக் காண்கின்றனர். எந்த நெறியைப் பின்பற்றுவராயினும், 'கேளுங்கள்' என்று இதனை எடுத்துச் சொல்வேன்.

குறிப்பு: வரி 1 முகம்-சிவலிங்கம் ''சத்திதான் நிற்கும் ஐம்முகம் சாற்றிடில்'' (7ம் தந்திரம், பாட்டு 1741) பீடம்-சத்தி இருக்கை. முகம். பீடம் என்பன முறையே நாத விந்துக்களுக்காயின. ''விந்துவும் நாதமும் மேவுமிலிங்கமாம், விந்துவதே பீட, நாதலிங்கமாம்'' (7-ம் தந்திரம், பாட்டி 1757)

வரி 2: இடம்-பரவெளி. சத்தி. ''ஆகின்ற சத்தியுள் அத்திசைபத்தே'' (7-ம் தந்திரம், பாட்டு 1732). தெய்வம்-சிவன். ''ஆதிபரந்தெய்வம் அண்டத்து நற்றெய்வம், சோதியடியார் தொடரும் பெருந்தெய்வம்'' (7-ம் தந்திரம், பாட்டு 1767) இடம், தெய்வம் என்பன முறையே சத்தி, சிவனுக்காயது,

வரி 3: வருக்கம் - அண்டசராசரம்; சுத்த, அசுத்த மாயாக்கூட்டம். ''வருக்கம் சுகமாம் பிரமமுமாகும், வருக்கம் சராசரமாகும்'' (9-ம் தந்திரம், பாட்டு 2678) ''ஒத்த இருமாயாக் கூட்டத்திடை ஊட்டிச், சுத்தமாகும் துரியம்'' (7-ம் தந்திரம் பாட்டு 1771) ''வருக்கஞ் சாரசரமாகும்''என்றார் முன்னே 52-வது பாட்டிலும்.

(தொடரும்)

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — மூன்றும் கொத்து

இனி, மூன்றுங் கொத்து, அன்பைப் புலப்படுத்தும் சிவசக்தி விநியோகம். பிறவிப் பிணிக்குத் திருநாமம் புணையானதென்ற திருவருள் விநியோகமாவன.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
    தடந்திரையா லெற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியினேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
    கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
    அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
    கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

(இ - ள்). தேவரீர் திருவருட் சகாயமின்றி யாதொரு பற்றுக் கோடில்லாது ஆணவமல வேதனையினாலே அளவில்லாத பிறவிச் சாகரத்தில் சுதந்தர ஈனனான அடியேன் வீழ்ந்திகழ்ச்சி யாகிய துன்பத் திரையால் அலைந்து உருண்டு ஓடுகையில். யாதொரு ஆதரவுமில்லாமல், கொவ்வைக் கனியும் பவளமும் போன்ற வாயையுடைத்தான பெண்களாகிய காற்றினால் அச் சமுத்திரத்தில் ஓரிடமும் தரியாது அலையும்போது, இச்சையாகிய பல முயற்சியான சுறுமீன் வாயிலகப்பட்டு, இனி ஒரு காலத்தினும் அருட்கரை கிட்டாது; எவ்வகை பிழைப்பதென அலையுங் காலம், நுகத்தின் துணை வழி கழி நேர்பட்டது போல, பரமகுரு வெழுந்தருளி உபதேசித்த திருநாமத் தெப்பத்தை மிதப்பாகப் பிடித்துக் கிடக்கும் என்னை, "முன்னவனே! ஆதியந்தமில் லாதோய்! திருவருளான திருவடி ஞானக்கரைகாட்டி யடிமைப் பணி கொண்டாய்; மூர்க்கனுக்கு" எனவே, நல்லோர் பெறுவது புல்லோரும் பெற்றதென அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரு. 13/- மேற்படி நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உரை நடை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 2-ன் தொடர்ச்சி)

முப்பத்து முக்கோடி தேவர்கள்.

முறுக்குடை நறைச்சத தளத்திரு மலர்த்தவிசு
சொர்க்கத் தலத்தோடு சேடசய னத்தையும்
முடித்தலை யடித்தலை பதித்தெதிர் துதித்தவர்த
ம்க்குக் கொடுத்தானை மாதிரமொ ரெட்டையும்
இறைப்பொழு தினிற்பொடி படுத்தருள் கொடுக்கவல
சத்திக் கரத்தானை யூதியமெ னத்தனை
இருப்பினு நடப்பினு நினைப்பவ ரிருக்கவெமர்
சித்தத் திருப்பானை யாறிருபு யத்தனை
வெறுப்பொடு வகுப்பினை யறுத்தவ ருளத்துமலர்
பத்மப் பதத்தானை வேதபுரி யிற்சின
விடைக்கொடி வலத்தினு மடக்கொடி யிடத்துமுள
முக்கட் டிருத்தாதை யார்பணிகு ருக்களை
மறைக்கிழ வனைத்தலை புடைத்துல கனைத்தினையும்
ஒக்கப் படைத்தானை மூவிருமு கத்தனை
மருத்துவர் வசுக்கதி ருருத்திர ரெனப்பொலியு
முப்பத் துமுக்கோடி தேவர்கள்பு ரக்கவே. (11)

இதழ்கள் விரிந்த தேனையுடைய பிரம தேவன் எழுந்தருளி யிருக்கின்ற நூற்றிதழ்க் கமலாசனத்தையும், இந்திரன் அரசுபுரி கின்ற சுவர்க்க லோகத்தையும் திருமால் துயில் கொள்ளுகின்ற ஆதி சேட சயனத்தையும் தமது முடியையுடைய தலைகளைத்

திருவடிகளிலே பொருந்தும்படி வைத்து எதிர்நின்று துதித்தவர் களுக்குக் கொடுத்தவனை - எட்டுத் திசைகளிலுமுள்ள மலைகளை நொடிப் பொழுதில் பொடி படுத்தி அருள் கொடுக்க வல்லதாகிய வேற்படையைப் பிடித்த கையையுடையவனை ஊதியம் என்று கருதி இருக்கும்போதும், நடக்கும் போதும் தன்னை நினைப்ப வர்களாகிய எம்மவர்கள் அமைதி பெற்றிருக்க அவர்களது சித் தத்திலே தங்கியிருப்பவனை பன்னிரு தோள்களை உடையவனை- வெறுப்பு விருப்புக்களை அறுத்த மெய்ஞ்ஞானியரது நெஞ்சத்திலே மலர்கின்ற தாமரை போன்ற திருவடிகளை உடையவனை வேத புரியிலே சினத்தையுடைய இடபக் கொடியை வெற்றிக்கு அடை யாளமாகவும் இளமையான கொடி போன்ற தையல்நாயகியை இடப்பாகத்திலும் வைத்திருக்கின்ற மூன்று கண்களை உடைய அழகிய தந்தையாராகிய வயித்தியநாதப் பெருமான் பாராட்டு கின்ற ஆசாரிய மூர்த்தியை - நான்முகனைத் தலையிலே குட்டி உலகங்கள் எல்லாவற்றையும் ஒரு சேரப் படைத்தவனை - ஆறு திருமுகங்களை உடையவனை மருத்துவர்களாகிய அசுவினி தேவரிருவரும் வசுக்கள் எண்மரும், கதிரவர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும் என விளங்குகின்ற முப்பத்து முக் கோடி தேவர்கள் காப்பாற்றுவார்களாக.

(தொடரும்)

குருபரர் பாடல்களுள் குழந்தை இயல்

வித்துவான், திரு. ம. வே. பசுபதி அவர்கள்,
தமிழாசிரியர், கும்முடிப்பூண்டி.

தோற்றுவாய் :

"உரைமுடிபு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப — நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்."

என்பது 'பழமொழி'ப் பாடல். கரிகாற் பெருவளத்தான் ஏழாண்டு அகவையிலேயே அரியணையேறிச் செங்கோலாட்சி புரிந்தான். அதுகாலை, அவன் நரைமுடித்து நீதியில் முதிர்ந்த பெரியோரும் உவப்ப முறைசெய்த தன்மையைத்தான் இப்பாடல் விளக்குகின்றது. கரிகாலனன்றி மற்றும் பல அரசர்களும் மிக்க இளமையிலேயே அரசப்பொறை மேற்கொண்டதாக நம் வரலாறுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன. தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் மிக்க இளமையிலேயே மாபெரும் மல்லரும் மருளும் அருஞ்சமர் புரிந்தானென்பது 'கிண்கிணி களைந்தகால்" என்னும் துவக்கத்தையுடைய புறப்பாட்டாலறியலாகும். நெடுஞ்செழியன் அப்போருக்குப் புறப்பட்ட அன்றுதான் சதங்கை அணிந்திருந்த காலிலே வீரக்கழல் கட்டிக் கொண்டானும்; தாய்ப்பால் விடுத்து வெண்சோறுண்டானும்!

அரசர் குலத்துச் சிறுவர்கள் மட்டுந்தான் அறிவாற்றல்களில் சிறந்து விளங்கினரா? இல்லை! கவுணியக் குழந்தை கைந்நோவத் தாளமிட்டுக் கன்னல் தமிழ்பாடி, மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கச் செய்யவில்லையா? செந்திலம் பதியுறையுங் கந்தவேள்அருள் பெற்றுக் குமரகுருபரர் ஐந்தாண்டில் பழுத்த தமிழ் பாடவில்லையா? இங்ஙனம் சிறுவயதிலேயே பெருஞ் செயல்கள் புரிந்த குழந்தைகள் பலர். அன்னோர் நிரலில் மெய்கண்ட தேவரும் ஒருவர் என்பதை அறியாதார் யாரே?

"ஒருமைக்கண் தாம்கற்ற கல்வி ஒருவற்(கு)
எழுமையும் ஏமாப் புடைத்து!"

என்பது 'பொய்யில் புலவன் பொருளுரை.' தெய்வ அருள்பெற்ற அவ்வருட் குழந்தைகட்கு முற்பிறவியின் கல்வியுமுதவ, அன்னோர் உலகம் போற்றும் உயர்வு பெற்றனர்!

இனிக், குவலயம் போற்றும் குமரகுருபர சுவாமிகள் இயற்றி யருளிய குழந்தை இலக்கியங்களாம் பிள்ளைத் தமிழ் நூல்களில் சில பகுதிகளைச் சுவைக்க நினைவுக்குக் கொண்டு வருவோம். சுவாமிகளின் பிற நூல்களில் குழந்தைகளைப் பற்றிக் கூறிய வற்றையும் எண்ணுவோம்!

மழலை இலக்கியங்கள்

மழலைச் செல்வங்களைத் தலைமையாக்கிச் செய்யும் இலக்கியங்களே பிள்ளைத் தமிழ் நூல்களாகும். இத்தகைய பிள்ளைத் தமிழ் நூல்களிலிரண்டைக் குமரகுருபர சுவாமிகள் தமிழுய்யத் தந்தருளினர். மதுரை மீனாட்சி யம்மையை மழலையாக்கிக் கண்ட தமிழே, 'மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்'. புள்ளிருக்கு வேளூர்க் குமரக் கடவுளைக் குழந்தையாக்கிக் கண்ட தமிழே, 'முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்'.

மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்ப் பருவங்கள்:—

(1) காப்பு, (2) செங்கீரை, (3) தால், (4) சப்பாணி, (5) முத்தம், (6) வருகை, (7) அம்புலி, (8) அம்மானை, (9) நீராடல், (10) ஊசல், என்னும் பத்தாகும்.

முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்ப் பருவங்கள்:—

(1) காப்பு, (2) செங்கீரை, (3) தால், (4) சப்பாணி, (5) முத்தம், (6) வருகை, (7) அம்புலி, (8) சிற்றில், (9) சிறுபறை (10) சிறுதேர், என்னும் பத்தாகும்.

இவ்விரண்டு பிள்ளைத் தமிழ் நூல்களின் பருவங்களிலும் இறுதி மூன்றும் வேறு பட்டுள்ளன. காரணம், முன்னையது பெண் தெய்வமாகிய மீனாட்சி யம்மையைத் தலைமையாகக் கொண்டதெனவே, பெண்மைத் தொழில்களாகிய அம்மானை யாடல், புனல்நீராடல், பொன்னூசலாடல் என்பன பருவங்களாக இடம்பெறுகின்றன. பின்னையது ஆண்தெய்வமாகிய குமரப் பெருமானைத் தலைவனாகக் கொண்டதெனவே ஆண்சிறார் தொழில்

களாகிய சிற்றிலழித்தல், சிறுபறைகொட்டல், சிறுதேர் உருட்டல் என்பன இடம் பெறுகின்றன.

காப்புக் கூறுவதிலும் இரு நூல்கட்கும் வேறுபாடுண்டு. மீனுட்சியம்மைக்குத் திருமால், சிவபெருமான், சித்திவிநாயக் கடவுள், முருகக் கடவுள், பிரமதேவர், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சத்தமாதர்கள், முப்பத்துமுவர் (அசுவினி தேவரிருவர், அட்டவசுக்கள், ஏகாதசருத்ரர், துவாத சாதித்தர்) ஆகியோர் காப்பாக வைக்கப்படுகின்றனர். குமரக் கடவுட்குத் திருமால், வைத்திய நாதர், தையனுகியம்மை, கற்பக விநாயக் கடவுள், பிரமதேவர், தேவேந்திரன், திருமகள், கலைமகள், சத்தமாதர்கள், முப்பத்துமுக்கோடி தேவர்கள் ஆகியோர் காப்பாக வைக்கப்படுகின்றனர்.

முன்னையதில் நூற்காப்பு உட்பட நூற்றிரண்டு செய்யுட்களும், பின்னையதில் நூற்காப்பு உட்பட நுற்றொரு செய்யுட்களுமுள்ளன.

புலிப் பருவம்:

பாக்களுக்குள் வெண்பாப் புலி; உலாவிலே பெதும்பை புலி; அதேபோல் பிள்ளைத் தமிழிலே அம்புலிப் பருவம் புலி. அங்கே தான் கவிஞனுக்கு வேலையதிகம்! அம்புலிப் பருவம் இப்படித்தானிருக்க வேண்டும் என இலக்கணம் வகுத்ததைப் போலக், குருபரர், தம் பிள்ளைத் தமிழ் நூல்களின் அம்புலிப் பருவத்தை அமைத்துள்ளார். மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழின், அம்புலிப் பருவப்பாக்களின் ஈற்று அரையடி:-

“ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே!”

என்பது. முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழின், அம்புலிப் பருவப் பாக்களின் ஈற்று அரையடி:-

“அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே!”

என்பது. இருநூல்களிலும் “ஆடவாவே” என்ற சொல்லாலேயே அம்புலியை அழைக்கின்றார். அதற்கு ‘ஆடவருக!’ என்பது பொருள். ஆடவாவே என்பது குமரகுருபரர் அவதரித்த தென்

பாண்டி நாட்டுப் பழகுதமிழ். கந்தபுரி என்பது "புள்ளிருக்கு வேளூர்" எனப்படும் வைத்தீசுவரன் கோயிலைக் குறிக்கும். அத் தலத்தெழுந்தருளிய முருகப் பெருமான் மீது பாடப்பட்டதே இரண்டாவதாகிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் என்பது ஈண்டு நினைவு கொள்ளற்பாலது.

அம்புலியை நால்வகை உபாயத்தானு மழைப்பது இவ்விரு நூல்களிலும் மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழில்,

"அம்புலி! நீ மீனாட்சியம்மையிடத்து ஆடவருதி;நின்போல் வார்க்கு மாபாதகம் போக்குமித் தலமலது புகலிலை" எனவே உன் பாதகம் நீங்கும்; களங்கம் அழியும்! அம்மட்டோ?

" விண்டலம் பொலியப் பொலிந்திடு யேல்உனது
வெம்பணிப் பகைவிழுங்கி
விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதிவெயில்
விரியுஞ் சுடர்ப்பருதியின்
மண்டலம் புக்கனை யிருத்தியெனில் ஒள்ளொளி
மழுங்கிட அழுங்கிடுதிபொன்
வளர்சடைக் காட்டெந்தை வைத்திடப் பெறுதியேல்
மாசுணஞ் சுற்றவச்சம்
கொண்டுகண் துஞ்சா திருப்பது மருப்பொங்கு
கோதையிவள் சீறடிக்கண்,நின்
குடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெம்
கோமாட்டி பாலடைந்தால்
அண்டபகி ரண்டமு மகண்டமும் பெறுதி"

என்று கூறிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழில்,

'அம்புலி! நின் கயரோகமுடன், முயற்கறையும் துடைத் திடக் கருதிடுதியேல், எம்பெருமானின் திருமுன்ன ரிருக்கும் திருநீற்றையும், அங்கசந்தானத் தீர்த்தத்தினின் றெடுக்கும் மண்ணையும், அள்ளி இட்டுக்கொள்; அன்றியும் சித்தாமிர்தத் தீர்த்தத்தின் ஒரு சொட்டே சாலுமே உன்நோய்கள் தீர; எனவே குமரனிடம் வருக; உன் நோய்கள் தீர்ப்பான்; மேலும் இங்கு வந்தால், இவன்,

"பொழியாத புயல்தங்கு புவனமும் திசைமுகப்
புத்தேள் பெரும்புவனமும்
பொன்னுலகு மண்ணுலகு எவ்வுலகு வேண்டினும்
பொருளன்று இவற்குமற்ற
அழியாத வீடும் தரக்கடவன்"

என்று கூறுகின்றார்.

குமாரசுவாமி பிள்ளைத் தமிழின் அம்புலிப் பருவத்தின் கண் 'தோன்றலிவன் நின்னை யொத்துளனால் நினக்குமொரு துணை' என்றும், 'உன்செய்கை எம்பிரான் தன்செய்கை போலுமால்; உன்னையிவன் ஒவ்வாதிரான்' என்றும், அம்புலியொடு முருகனை ஒப்பக்கூறிப், பின்னரும் வாராத அம்புலியைப் 'புவனம் படைத்த இவன் நின்னின் மிக்கான்' என்றும், 'நீயிவற் கொப்பன்மை செப்புவதென்? இப்பரிசில் நின்பெருந்தவம்' என்றும், அம்புலியினும் முருகப் பெருமானின் உயர்வுண்மையைக் கூறிப், பின்னரும் வாராத அம்புலியை முன்னர்க் கூறியாங்குக் கொடுத்தலை உணர்த்திப் பின்னர், 'மற்று இவன் முனிந்தால் உனக்கு அட்ட திக்கிலும் ஒரு திக்கில்லை' என்று தீங்கைக் கூறியும்,

'முடியமரர் மொத்துண்டநாள்
முழுமதிக் கடவுள்நீ அவமதிப் புண்டது
மொழிந்திடக் கடவதன்றால்
அற்றைக் கணக்கின்றும் வந்திருக்கின்றது'

என்று அச்சுறுத்தியும் கூறுவன பன்முறை பயின்று சுவைக்கத்தக்கன.

இங்ஙனம் புலிப்பருவமாகிய அம்புலிப்பருவம், குருபரர் தந்த இருநூல்களிலும், எழிற் பூஞ்சோலையாய் விளங்குகின்றது.

குழந்தையர்க்கு அணிகள்.

குழந்தைகளுக்கு அணியப்படும் அணிகள் அனைத்தையும் குருபரர் தம்நூல்களில் கூறியுள்ளார்; மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மீனாட்சியம்மைக்கு அணிவித்த அணிகளாகக் கூறப்படுவன, முடிச் சூழியம், சுட்டி, மகரகுண்டலங்கள், நூபுரம், கிண்கிணி, முச்சி, பொற்பட்டம், குதம்பை, தமனியக் கொப்பு, சிலம்பு, கூந்தற்பிறை, மணிமேகலை; இவையன்றிப் பல்வித

மணிகள் பதிக்கப் பட்ட கழுத்தணிகள். குமரக்கடவுட்கு அணி வித்த அணிகளாகக் கூறப்படுவன: கிண்கிணி, சிலம்பு, அரை ஞாண், அரைமணி, அரைவடம், பட்டம், நெற்றிப் பொட்டு. சுட்டி, குண்டலம், குழை, சூழி, முச்சி, புயவலயம், முதாரி, பரிபுரம், வாளி; இவையன்றிப் பன்மணி மாலைகள்.

குழந்தைச் செயல்கள்

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்க்கண் அம்மையாரின் அருட்செயல்கள் விளக்கப் பட்டுள்ளன. குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்க்கண் அருட்செயல்களோடு குமரனின் குழந்தைச் செயல் களையும் சுவைமிக விளக்குகின்றார். 'புழுதியளைந்த பசுந்திரு மேனிப் பொங்கொளி பொங்கியெழ'' என்ற (முத். - செங். - 7) தொடர், குழந்தைகள் புழுதியில் விளையாடுதலைக் காட்டுகிறது. மேலும்,

'விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே
கரைவுறும் அஞ்சன நுண்துளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புனல் அருவி படிந்துடல்
கருவடி யுண்ணுமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துநின்
ஒண்பதம் நோவாமே'

என்ற வரிகள், குழந்தைச் செயல்களாகிய விரலைக் கடித்தல், விழுந்தழுதல், தொட்டிலுதைத்தல் முதலியவற்றைச் சித்திரித் துக் காட்டுகின்றன. இப்பாடலின் எஞ்சிய பகுதி 'செங்கீரை ஆடுதல்' என்ற குழந்தைச் செயலை விளக்கிக் காட்டுவதோடு, செங்கீரைப் பருவத்தின் இலக்கணமாகவே அமைந்துள்ளது.

அவ்வரிகள் :

'ஒருதாள் உந்தி எழுந்திரு கையும்
ஒருங்கு பதித்துநிமிர்ந்(து)
அருள்பொழி திருமுகம் அசைய அசைந்தினி(து)
ஆடுக செங்கீரை!'

குழந்தையன்பு

பிள்ளைத் தமிழ் நூல்களில் குழந்தைகளைப் பற்றிக் கூறிய தோடல்லாமல், பிற தம் நூல்களிலும் குமரகுருபர சுவாமிகள் குழந்தைகளைப் பற்றிக் கூறியுள்ளார். குழந்தையன்பைச் சிதம் பரமும்மணிக் கோவையிலே ஓர் ஆசிரிய மணியிலே குறிக் கின்றார்:—

“இறைவனே! பத்தியால் யானுனைப் பலகாலும் புகழ்ந்து பாடினேன்; அதற்கு என்மனம் ‘நாணிலைகொல்’ என நகுகிறது; ஏனென்றால், யான் நின்னைக் குறைமொழியால் புகழ்ந்தேனும்! பொருளற்ற பல்லியின் சொல்லுக்கும் வினைமேற் செல்வார் பொருள் காண்கின்றனரே! அங்ஙனமிருக்கக் குழந்தையன்பு போன்ற அன்பு தூண்டியதால் பாடிய என்மொழி எங்ஙனம் நாணத்தக்கது?” என்கிறார்.

சிறு குழந்தைகள் பேசும் பேச்சுக் குறைபாடுடையன எனினும், அதன் இனிமையால், பெற்றோர்கள் அம்மொழிகளைக் குழலினும் யாழினும் இனிதென்கின்றனர். குழந்தைகள் மொழி, ‘அறிவுதலைக் கூடாச் சின்மொழி’ யேனும் அகம் குளிர வைப்பது:

“யாவர் கூற்றுநின் ஏவலி னல்லதை
நிகழா நிகழ்ச்சி உணராது போலும்
குழந்தை யன்பிற் பெரும்புகழ் நவிற்றிநின்
ஆணையின் நின்ற என்னை
நாணிலை கொல்லென நகுவதென் மனனே!”

என்பதே குழந்தையன்பை விளக்கிய சிதம்பர மும்மணி கோவைப் பாடல்.

குழந்தையுடல்

குழந்தைகளின் உடலியலையும் ஓரிடத்தில் குமரகுருபரர் குறிக்கின்றார். குழந்தையுடல் மென்மை மிக்கது; குழவியின் குடர் ‘பசுங்குடர்’; கடியன தாங்கா இயல்பினது; எனவேதான் குழந்தைக்கு யாதேனும் பிணிகள் வரின், தாய் அதற்கு மருந் தளிக்காமல் அதற்கான மருந்தைத் தானுண்பாள். இச் செய்தியைப்,

(தொடர்ச்சி 169-ஆம் பக்கம் பார்க்க.)

சுந்தர மூர்த்தி சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள்

Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Kotpuli was one of the63 Nayanmars canonized in the Peria Puranam. He lived at Tirunattiyathankudi and was an admirer of St. Sundarar. He took once St. Sundarar with all deference to his house and offered his two daughters Singadi and Vanappagai, in marriage. St. Sundarar accepted them as daughters and in some of his later poems he had called himself the father of Singadi and Vanappagai.

After visiting a few more shrines besides the one at Tirunattiyathankudi, St. Sundarar returned to Tiruvarur. The great festival at Tiruvarur in the month of Panguni (March-April) was nearing and Paravaiyar needed money to feed the devotees who gathered at Tiruvarur at the time of the festival. St. Sundarar had none but his Lord to fall back upon. So he made a trip to Tiruppugalur and put forth his demand in a decad of poems. Soon after that, he felt sleepy and so in the monastery, which was nearby the temple, lay down with the bricks serving him as a pillow. When he woke up he found to his surprise, that all the bricks on which he rested his head had turned into gold. There came out a padigam in all gratitude.

திருப்புகலூர்: பண்-கொல்லி

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னும்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

"O, poets, if you praise and fawn on the men leading untrue lives, they will never give anything to the devotees. Don't sing about them. Go and sing of the father at Pugalur. By that, you will get food and clothing and the pains will be destroyed. That is for this birth. Further you will be the rulers of the heavens. And there is no doubt about it at all.

(To be continued)

(முன் 167-ஆம் பக்கத்தொடர்ச்சி)

"பாலுண் குழவி பசுங்குடர் பொருதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு"

என்னும் சிதம்பர மும்மணிக் கோவை வரிகளால் உணர்த்துகிறார்.

முடிப்புரை

குருபரரின் பிள்ளைத்தமிழ் நூல்களால் தெய்வத்தைக் குழந்தையாக்கி அக்குழந்தையினிடத்தே தெய்வங் காணும் பெருஞ் செயலையுணரலாம். குழந்தைக்கு அணிகள் இவை யெனவும், குழந்தைச் செயல்கள் இவையெனவும், குழந்தையன்பு இன்னதெனவும், குழந்தையுடல் இத்தன்மைத்தெனவும் குருபரர் விளக்கியுள்ளமை நினைந்து நினைந்து சுவைக்கத்தக்கன.

கருணையுள்ள கடவுள் ஏன் கஷ்டப்படச் செய்கிறார்?

திருவருள் தவயோக ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள்,
மதுரை ஆதீனம்.

ஒரு சிலர் நம்மைக் கருணையுள்ள ஆண்டவன் ஏன் படைத்துத் துன்பப்படும்படி செய்கிறான் என்று கேட்கலாம். இதற்கு சிவஞான சித்தியார் தக்க பதில் கூறுகிறது. நமது அஞ்ஞானமாகிய ஆணவ அழுக்கை நீக்க வேண்டுமென்று நம்மீது கொண்ட கருணையினாலேயே ஆண்டவன் விசித்திர மான இவ்வுலகத்தையும், உணவுப்பொருள்களையும், மனித உடலையும் தந்து இன்ப துன்பங்களை நுகரும்படி செய்து, நமக்கு அனுபவ ஞானமும், தெளிவும் உண்டாகும்படி செய்கின்றான் என்பதே அப்பதிலாகும். உயிர்களுக்கு ஆண்டவன் அழுக் கடைந்த இந்த உடல்களையும், போகப்பொருள்களையும் கொடுத் திருப்பது, உயிர்களை அநாதியாகப் பந்தித்திருக்கும் ஆணவ மலத்தை நீக்குவதற்கேயாம். அது வண்ணான் அழகிய கோடிப் புடவைகளுக்குச் சாணியும், உவர் மண்ணுமாகிய அழுக்குப் பொருள்களைப் பொருந்தும்படி செய்து, முன் புடவையிலிருந்த அழுக்கையும், பின்னால் சேர்க்கப் பெற்ற அழுக்குகளையும் முற் றாகப் போக்கி, புடவையைத் தூய நிறத்த தாக்குவது போலா கும். இதனை விளக்குவதற்கு மேலும் சில உதாரணங்கள் கூற லாம். வைத்தியன், ஒருவனிடத்தில் இருக்கிற வியாதியைப் போக்கவும், அவனுக்கு உடல்நலத்தை உண்டாக்கவும், வியாதியஸ்தன் விரும்பாத பல மருந்துகளைக் கொடுத்து ரண சிகிச்சைகளையும் செய்கிறான். கூரிய கருவிகளால் வெட்டவும், குத்தவும், அறுக்கவும் செய்கிறான். அவ்வாறு வைத்தியன் செய்வதெல்லாம் வியாதியஸ்தனிடத்திலிருந்து வியாதி நீக்கத்

இக்கட்டுரை மதுரைச் "சித்சபையின் ஆண்டுவிழா" மலரிலிருந்து அனுமதியுடன் பிரசுரிக்கப்பெறுகிறது.

திற்கே யல்லவா? அது போலவே நீதியுள்ள அரசாங்கம் சிறைத்தண்டனை விதிப்பது குற்ற நீக்கத்திற்காகவும், கல்விச் சாலைகள் வைத்து மக்களுக்குக் கல்வி போதிப்பது அறியாமை யைப் போக்குவதற்காகவும் ஆகும். மேலும் தந்தையும், தாயும் தாங்கள் பெற்ற புதல்வர்களைத் திருத்துவதற்காக உறுக்கு தலும், அடித்தலும், கட்டி வைத்தலும், அவர்கள் மேல்வைத்த அன்பின் காரணத்தால் செய்கின்ற காரியங்கள் அல்லவா? இவற்றை விளக்கியே சிவஞான சித்தியாரில் கீழ்க்கண்ட பாடல்கள் அமைந்துள்ளன:

மண்ணுளே சில வியாதி மருத்துவன் அருத்தியோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும் சிலநோய் எல்லாம்
கண்ணிய கட்டி பாலும் கலந்து உடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே வினையறுப்பன்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனர் முனிவும் என்றும்

இவற்றுள் வண்ணான் புடவையையும் உண்டு பண்ணவில்லை. அழுக்கையும் உண்டுபண்ணவில்லை. வியாதியஸ்தனையும் வியாதியையும் வைத்தியன் உண்டு பண்ணவில்லை. அரசாங் கம் சிறைச்சாலைக்குள் செல்லும் குற்றவாளிகளையும், அவர்களது கெட்ட குணங்களையும் உண்டுபண்ணவில்லை. பள்ளிக்குச் செல்லுகின்ற மாணவர்களையும், அவர்களது கல்வி இல்லாத் தன்மையையும் யாரும் உண்டுபண்ணவில்லை. அப்படியானல் உயிர்களைப் படைத்தது யார்? அவற்றிற்கு அஞ்ஞானம் எப்படி வந்தது என்ற கேள்விகள் பிறக்கலாம்

அரசன் என்று உண்டோ அன்றே மக்களும் உண்டல் லவா? அதுபோல என்று ஆளுகின்ற ஆண்டவன் உண்டோ, அன்றே ஆளப்பெறும் உயிர்களும் உண்டு. ஒரு தகப்பனுக்கும் அவன் பெற்ற குழந்தைகளுக்கும் உள்ள தொடர்பு தூல உடல் சம்பந்தமாக ஏற்பட்டதே தவிர தகப்பனுடைய உயிருக்கும் குழந்தையினுடைய உயிருக்கும் யாதொரு தொடர்பும் பந்தமும் கிடையாது. அதுபோல் ஆண்டவனுக்கும், சீவராசிகளுக்கும்

உள்ள தொடர்பு அவன் உடல் கொடுத்தனுல் ஏற்பட்ட தொடர்பே தவிர வேறு எவ்வித தொடர்பும் பந்தமும் கிடையாது. சைவசித்தாந்தம் 'பரமான்மா என்று சொல்லப்பெறும் பதிஒன்று, சிவான்மா என்று சொல்லப் பெறும் பசு எண்ணிறந்தன' என்று கூறுவதைச் சுட்டிக் காட்டி அதற்குக் காரணங்களும் கூறுகின்றது. பதியாகிய பரமான்மா சுத்தத் தங்கம் போன்றது. தங்கத்தில் களிம்பு எப்படி ஏற முடியாதோ, அதேபோல பதியாகிய கடவுள் கட்டுப்படுத்தப் படுகின்ற அல்லது அசுத்தப் படுகின்ற தன்மை உடையவரல்லர். தங்கமானது எவ்வளவு சிறிய அணுவானுலும் அதில் களிம்பு ஏறமுடியாது. களிம்பு ஏறுமானுல் அது தங்கமாகாது. அதுபோல் மெய்ஞ்ஞானமுடைய பரமான்மாவின் எவ்வளவு சிறிய அம்சமும் அஞ்ஞானமுடையதாக மாட்டாது.

ஆனுல் பசு எனப்படும் சிவான்மாக்களாகிய நாமோ, செம்பு போன்றவர்களாய் செம்பில் களிம்பு இயல்பாகவே ஏறி இருப்பதுபோல, அஞ்ஞானத்தால் ஏற்பட்ட சில அசட்டுக் குணங்களே உடையவர்களாய் இருக்கிரேம். செம்பிலுள்ள களிம்பு போவதற்கு இரசகுளிகை சேர்த்து அதைப் புடம் போட்டுச் சுத்தப்படுத்துவது போல், ஆண்டவன் நமக்கு (உயிர்களுக்கு) பல பிறவிகளேக் கொடுத்து அவற்றில் வரும் அனுபவ அறிவைப் பெறும்படி செய்து, பக்குவம் நோக்கி அருள்பாலித்து வருகிருன் என்று கூறுகின்றது.

மேலும் ஆண்டவனது தன்மைகளேயும், உயிர்களது தன்மைகளேயும் நன்ருக அளந்து ஆண்டவனுக்குச் சிறந்த எட்டுக் குணங்கள் உண்டு என்று கண்டார்கள் நம் முன்னேர்கள். அதனுலேயே திருவள்ளுவரும்,

"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" என்ருர்.

இறைவனே: (1) முடிவில்லாத ஆற்றலுடையவன், நாமோ அணுஅளவு ஆற்றலும் இல்லாதவர்கள் (2) முற்றுமுணர்ந்தவன் (திரிகாலம் உணர்ந்தவன்) நாமோ அடுத்த நிமிடம் என்ன நடக்குமென்பதை உணர முடியாதவர்கள் (3) முற்றறிவுடையவன். நாமோ சிற்றறிவுடையவர்கள் (4) தன்வயத்தன் (பிறர்

துணையின்றித் தானே இயங்குபவன்) நாமோ இறைவனது துணையின்றி வாழ முடியாதவர்கள் (5) தூய உடம்பினன் (அழியாத அருள் திருமேனி உடையவன்) நாமோ நாற்ற உடலுடையவர்கள் (6) பேரருள் உடையவன்-நாமோ பேரிருள் உடையவர்கள் (7) வரம்பில்லாத இன்பம் உடையவன்; நாமோ வரம்பில்லாத துன்பமும் சிறு அளவு சிற்றின்பமும் உடையவர்கள் (8) இயல்பாகவே பாசங்கள் நீங்கியவன், நாமோ மும்மலங்களால் சேட்டிக்கப்பட்டவர்கள் என்று நம் முன்னோர்கள் கண்டுரைத்தார்கள். இவற்றில் ஒவ்வொன்றிற்கும் போதிய காரணங்கள் சொல்லி நிருபிக்கலாம்.

இனி சீவான்மாக்களுக்கு அஞ்ஞானம் எப்படி வந்தது என்று பார்ப்போம். செம்பில் களிம்பு அநாதியாகவே ஒட்டியிருப்பதுபோல், உயிர்களை அநாதியாகவே பந்தித்திருக்கும் ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் என்ற மும்மலங்களின் சேட்டைகளே அவற்றின் அஞ்ஞானத்திற்கு மூலகாரணம். சீவான்மாக்களுக்கு ஆணவ மலத்தால் ஏற்பட்டிற்கும் அசட்டுக் குணங்களும் எட்டு என்றே நிச்சயித்திருக்கிறார்கள்.

அவை: (1) தனக்குத் தெரிந்த ஒன்றையே சாதித்தல். தனக்குத் தெரியாத உண்மைகள் உலகத்தில் நிரம்ப உண்டு என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தல் (நாத்திகத்திற்கு அஸ்திவாரமான தன்மை உலகத்தார் உண்டு என்பதை இல்லையென்பது (2) தான் சொல்வதைப் பிறர் கேட்க வேண்டுமென்ற விருப்பம், பிறர் சொல்வதை தான் கேட்டுக் கொண்டிருத்தலில் விருப்பக் குறைவும் உள்ள தன்மை (3) எடுத்ததற்கெல்லாம் கோபப்படுதல், (4) தன்னிடம் இல்லாத பொருளின் மேல் ஆசைப்படுதல் (5) கொலை செய்தலும், கொன்றதைத் தின்றலும், (6) எப்பொழுதும் கவலைப்பட்டு வருத்தமுறுதல், (7) நான்என்ற அகங்காரமும், என்னுடையது என்ற முனைப்பும் தலைக்கேறி இருத்தல், (8) தன் குற்றத்தை உணர்ந்து கொள்ள முடியாமல் பிறர் குற்றத்தைச் சொல்லி நகையாடுவதில் பெரியதோர் மகிழ்ச்சியும், திருப்தியும் கொள்ளுதல். இந்த எட்டு குணங்களில் யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு இருக்கிறதென்பதை அவரவரே அறிவர். ஆண்டவனும் அறிவான்.

இனி மாயா மலத்திற்கு ஏழு அசட்டுக்குணங்கள் உண்டென்று கண்டிருக்கின்றனர். அவை: (1) எவ்வளவு படித்திருந்தாலும் உண்மையை அறிய முடியாமை, (2) களவு செய்தல் கெடுதல் என்று தெரிந்தும் களவு செய்யாமல் இருக்க முடியாமை (3) கண்டதைச் சொல்லும் நேர்மை வராமை, (4) படித்தபடி நடக்க வேண்டும் என்று நினைத்தாலும் நடக்க முடியாமை (5) பெரும்பணம் படைத்தவனாக இருந்தாலும், பிறருக்குக் கொடுத்துதவும் மனப்பான்மை வராமை, (6) இறப்பு என்பது திண்ணமாக உண்டு என்பதைக் கண்டும் கேட்டும் உணர்ந்தும் அதைக் குறித்து மனம் தைரியப்படாமை. (7) பிறருடைய ஆக்கங்களைக் கண்டபோதும் கேட்டபோதும் மனம் பொறாமை. இவற்றில் யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு மயக்கம் இருக்கிறதென்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இனி, கன்ம மலத்திற்கு ஆறு குணங்கள் உண்டென்று கண்டனர். அவையாவன: (1) சோம்பேறியாக இருத்தல். (2) தூங்குதல் (3) புண்ணியத்தைச் செய்தல் (4) பாவத்தைச் செய்தல், (5) செய்யவேண்டிய தொழிலைச் செய்யாது விடுதல் (6) தன் குற்றத்தைப் பிறர்மேல் சுமத்துதல், (வாசற்படியில் மோதிக்கொண்ட ஒருவன் படி தட்டியது என்று சொல்வதைப் போன்றது.)

சீவான்மாக்கள் ஆண்டவனிடம் ஒன்றும் விண்ணப்பம் செய்யாதிருக்க ஆண்டவனுடைய முற்றறிவினால் ஜீவான்மாக்களுடைய கேவல நிலைமை அறிந்து அவற்றிற்கு இன்னின்ன செய்தால் அவை மேல் நிலைக்கு வரும் என்று உணர்ந்து, கருணையே காரணமாக அருள் புரிவதனால் அல்லவா ஆண்டவன் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத 'பரம்பொருள்' ஆன்மாக்களையெல்லாம் உய்விக்கின்ற "பரமான்மா" என்று எல்லோராலும் வாழ்த்தவும், வந்திக்கவும், பெறுகின்றான்?

இறைவன் நம்மீது கொண்ட கருணை காரணமாக நாம் நற்காரியங்கள் இன்னதென்று தெரிந்து அதனையே செய்து இன்ப வாழ்வு வாழவேண்டும், என்று கருதி நற்காரியங்கள் இவை இவை என்று நியதிப்படுத்தி வேதாகமங்களில் கூறி வைத்துள்ளனர். (1) பெரியோர் ஒழுகிய ஒழுக்க நெறியில்

தவறாது ஒழுகுதல். (2) அன்புடையவராயிருத்தல், (3) தனக்கு முன்பின் தெரியாதவரிடத்தும் கருணை உள்ளத்தோடு இருக்கும் அருளுடையராதல், (4) தத்தமக்கேற்ற ஆசாரங்களைக் கடைப்பிடித்தல், (5) தக்கோரை உபசரித்தல், (6) யாவரையும் நேசித்தல், (7) நல்லகுணம் உடையவராயிருத்தல், (8) விரதங்களை அனுட்டித்துத் தவ ஒழுக்கத்துடனிருத்தல், (9) தக்கோருக்கு உள்ளம் உவந்து தானம் செய்தல். (10) தன்னைவிட உயர்ந்தோரிடத்தில் மரியாதையுடன் நடத்தல், (11) தக்கோரை வணங்குதல், (12) உண்மையே பேசுதல், (13) ஆண்கள் பிறன்மனை விழையாமலும், பொதுமகளிரை விரும்பாமலும், பெண்கள் கற்புடையவராகவும் இருத்தல், (14) அடக்கமுடையவராயிருத்தல், (15) நல்லது இது, தீயது இது என்று பகுத்து உணரும் பகுத்தறிவுடையவராயிருத்தல், (16) ஆண்டவனையும் அடியார்களையும் அர்ச்சித்துப் பூசனை செய்தல் முதலியனவாம். இவற்றை உணர்ந்து நல்லனவே செய்தால் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு பெறலாம்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 2-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

54 பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம்அரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலம்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே.

54. The lotus is the glory of all flowers;
  The glory of all kine is Hara's use
Of that which they put forth. Glory of kings
  Is the unswerving straightness of their deeds.
But if we ask the glory of the tongue,
  'Tis to cry out aloud, Hail, Siva, hail.

(தொடரும்)

முக்கருவி (திரிகரணம்)

வித்துவான். திரு. க. வா. சச்சிதானந்தம் அவர்கள்
43, முருகாட்ட முதலி தெரு, புரசவாக்கம்,
சென்னை - 7.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஔவையார் பாடிய 'வாக்குண்டாம்' என்னும் நீதி நூலின் காப்புச் செய்யுள் இது. ''மலர்களைக் கொண்டு பவளம் போலும் திருமேனியையும் தும்பிக்கையையும் உடைய விநாயகப் பெருமானின் திருவடிகளை வழிபடும் முறைமையில் தவருமல் சார்பவர்களுக்கு நல்ல வாக்கு உண்டாம்; நல்ல மனம் உண்டாம்; மாமலராள் நோக்கு உண்டாம்; சாரும் அவர்கள் உடம்பு தளராது'' என்பது இதன் பொருள். இனி இப்பொருளின் விரிவைப் பார்ப்போம்.

வாக்கு மனம் உண்டாம்.

வாக்கு என்பது நாவழி நிகழும் சொல்லொலி. தும்பிக்கையான் பாதம் சார்வார் தமக்கு நல்ல சொல் வளம் உண்டாம். சொல்வளம் உண்டாதலாவது நல்ல இனிய பொருள் உடைய சொல் உண்டாவதாம். சொல் உண்டாதலாவது நுணங்கிய கேள்வியறிவால் வணங்கிய வாயினராதலாம்.

வாக்கு என்ருல் ஒழுங்கு. "வாக்கணங்கார் மணிவீணை'' (சீவக. 1473) எனச் சிந்தாமணியில் வந்தது காண்க. விநாயகப் பெருமான் பாதம் சார்வார் தமக்கு நல்ல ஒழுங்கு உண்டாம்.

வழக்கில் 'வாக்குக் கொடுத்தான்' என்று சொல்லுமிடத்தில் வாக்கு என்பது 'உறுதிமொழி' எனப்படும். எனவே உறுதியான சொல் உண்டாம் என்க.

'வாக்குப் பலித்தது' என்ற இடத்தில் 'சாபம்' என்ற பொருள் தரும். தரவே வாக்குண்டாம் என்றால் சொன்னபடி நடைபெறுகின்ற – பலிக்கின்ற சொல் உண்டாகும் என்பதாம்.

வாக்கு என்பது புகழ்ச்சொல். "வாக்கமை உருவின் மிக்கார்" (1258) என்றது சிந்தாமணி. எனவே புகழ் உண்டாகும் என்பதாம்.

இன்னும் கவித்திறம், நூல் நடை, உரிமை என்னும் பொருளையும் தரும். வாக்கு உண்டாம் என்பதற்கு அவை யாவும் உண்டாம் என்க. உறுதியான சொல் – ஒழுங்கான சொல் – பலிக்கும் சொல் - புகழ் தரும் சொல் உண்டாம் என்று பொருள் கொள்ளலாம்.

வாக்கும் வாயும் ஒன்றுகா. 'வாக்கு வடசொல், 'வாய் தமிழ்ச் சொல். வாய் திறந்தான் என்பதை வாக்குத் திறந்தான் எனல் ஒல்லுமோ! 'வாய்ச்சொற்கள் என்ன பயனுமில' என்றதிற் போல வாய்ச் சொற்கள் வாக்காகும். 'நல்வாக்கு' என்றது நல்வாய் என்னும் பொருளைத்தாராது. நன்னெறியில் 'மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது' என்ற பாட்டால் சொல்லின் வன்மையும் மென்மையும் நெஞ்சின் மாசு அறுதலும் அருமையும் பற்றி ஏற்கப்பெறும் உண்மை உணர்த்தப்பட்டது.

அடுத்து நல்ல மனம் உண்டாம். மனம் நினைத்தற் கருவி. அந்தக்கரணம் (உட்கருவி) நான்கனுள் ஒன்று மனம். நினைத்தற்கு கருவியாயது மனம். மனத்தின் வழி வாக்கும் காயமும் (உடம்பும்) செல்லும். வாக்கு உண்டாக வேண்டின் நல்ல மனம் உண்டாக வேண்டும்.

மாமலராள் நோக்கு உண்டாம்.

நல்ல வாக்கும் நல்ல மனமும் உண்டாக வேண்டின் மாமலராள் என்பதைக் கலைமகள் எனக் கொள்ளின் அத்தேவி

யின் அருள் நோக்கு நல்வாக்கிற்குத் துணையாக வேண்டும். அவள் அருளில்லையேல் அவ்விரண்டும் நல்லனவாக இரா. மனத்தின் வழி வாக்கு இருந்தாலும் மாறுபடுவதும் உண்டு. நித்தியத்துவம் பெற எண்ணி வாய் சோர்ந்து நித்திரத்துவம் பெற்ற கும்பகருணனது' வாய்ச் சோர்வை இங்கு நினைத்துக் கொள்ளலாம். மனம் மறந்தாலும் நாக்கு நல்லதையே சொல்லுவதும் உண்டு. "நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றருளினுர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள். நல்ல வாக்கும் நல்ல மனமும் கலைமகள் அருளால் வருவனவேயாம்.

மாமலர்-தாமரை. மாமலராள்-வெண்டாமரையாள், செந்தாமரையாள் இருவர்க்கும் உரியது. திருமகள் எனக்கொள்ளின் அதுவும் சிறக்கும். மனம், வாக்கு உடம்பு மூன்றையும் திரிகரணம் என்பர். மனத்தின் குற்றத்தை அழுக்காருமை, வெஃகாமை, என்னும் இரண்டு அதிகாரங்களாலும், வாக்கின் குற்றத்தைப் புறங்கூருமை, பயனில சொல்லாமை, என்னும் இரண்டு அதிகாரங்களாலும், உடம்பின் குற்றத்தைத் தீவினையச்சம் என்னும் அதிகாரத்தாலும் திருவள்ளுவர் வற்புறுத்துவது இங்கு அறியத் தக்கது. மாமலராள் நோக்கு உண்டானுல் மனம், வாக்கு ஆகிய இரண்டு காரணங்களும் நமக்கு நல்லனவாகும் என்று கண்டோம். அடுத்துக் காயம் (உடம்பு) நல்லதாக அமைதல் வேண்டும். அதை 'மேனி நுடங்காது' என்பதால் அறிவித்தார், ஔவையார். 'கலைமகள் அருளால் வாக்கு மனம் இரண்டும் நல்லவாயின; மேனி நல்லதாதல் யார் அருளால் என எண்ணலாம். அது மலர் மகள் எனச் சிறப்பாகப் போற்றப் பெறும்.

மகன்-தேவன், மகள்-தேவி என்று பொருள்படும் உண்மையை மலைமகள், அலைமகள், கலைமகள், திருமகள், நாமகள் (பூதேவி) என்னும் வழக்காலும், விண்ணவர் கோமகன் (இந்திரன்) என்றதாலும் உணர்க. மகன்-மான், மகள் - மாள், என்று மருவிய வாறும் அறிக. கோமான், பெருமாள் எனல் இன்றும் உண்டு.

திருமகளின் அருளால் என உணர்தல் வேண்டும். திருமகள் செல்வம் எல்லாம் தருபவள். செல்வம், மனம், வாக்குக், காயம்

மூன்றும் செல்லத் துணையாய் நின்று உதவுவது. செல்வது செல்வம். செல்லாதது வறுமை. "செல்லாமை செவ்வன் நேர் நிற்பினும் ஒப்புரவிற் கொல்கார் குடிப் பிறந்தார்" என்னும் நாலடிப் பாடற்கண்ணும் 'செல்வாய் செல்வம் தருவாய் நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ' 'நலங்கொள் செல்வு அளித்தான் எங்கள் நாதனே' எனத் தேவாரத்தின் கண்ணும் இப்பெயர்க் காரணம் புலப்படும்.

வாக்கு மனங்களுக்கு மாமலராள் (பெரிய வெண்தாமரை மலரில் இருக்கும் கலைமகள்) நோக்குப் போல, மேனி நுடங்காமைக்கும் மாமலராள் (பெரிய செந்தாமரை மலரில் இருக்கும் இலக்குமி) நோக்கு காரணம் என உணர்தல் வேண்டும். எனவே மாமலராள் என்ற சொல் நடுவில் சிலேடைப் பொருளில் இருந்து சிங்க நோக்காக இருபாலும் பொருந்திப் பொருள் தருகின்றது என்பதை நினைக்க மனம் பெரு மகிழ்ச்சி கொள்கின்றது.

கலைமகள் அருள் மிகுந்த போது மலர்மகள் அருள் குறைந்தும், மலர்மகள் அருள் மிகுந்த போது கலைமகள் அருள் குறைந்தும் வருதல் உண்டு.

> "நாவின் கிழத்தி யுறைதலால் சேராளே
> பூவின் கிழத்தி புலந்து"

என்றார் பெரியார் (நாலடியார்). அப்படியில்லாமல் தும்பிக்கையான் பாதம் சார்வார் தமக்கு இருவர் அருளும் ஒத்து எக்காலத்தும் ஒன்று போலவே இருக்கும் என்பதை நமக்கு அறிவிப்பதற்காகவே இடையில் இரு பொருள்பட அமைத்துக் காட்டினார் ஔவையார்.

மேனி நுடங்காது:

இலக்குமியருள் இருந்தால் மேனி நுடங்காது. மேனிஎன்பது உடம்பு. கட்டமைந்த அழகிய உடம்பே மேனி எனப்படும். பழக்கடையில் மேனியான பழத்தையே வாங்குகிறோம். அங்கு மேனி என்பது மேல்விளங்கும் ஒளியொடு நல்ல அமைப்பும் அழகும் குறித்து நிற்கின்றது. மேனி நுடங்காது என்றால் உடம்பு நோய் முதலியவற்றால் தளர்ந்து அழகு கெடாது

என்பதாம். உடம்பு தளராது நல்லதானுல் மனம் நல்லதை நினைக்கும். மனம் நல்லதானுல் உடம்பு நல்லதாகும். எனவே ஒன்றற்கொன்று ஆதாரம் ஆகும். அதனுல்தான் மனம்; வாக்கு, காயம் என வரிசைப்படுத்தாமல் வாக்கு, மனம், காயம் எனக் காயத்துக்கு முன்னர் மனத்தை அமைத்தார் ஔவையார். அன்றியும் அறத்துக்கும் இன்பத்துக்கும் வேண்டிய பொருளை நடுவில் வைத்து அறம், பொருள், இன்பம், என முறைப்படுத்தியது போலவே வாக்குக்கும் உடம்புக்கும் வேண்டியமனத்தை நடுவில் வைத்து வாக்குண்டாம், மனம் உண்டாம், மேனி நுடங்காது என முறைப்படுத்தினுர்.

சார்வார்

முற்கூறிய கலைமகள் நோக்காலும், திருமகள் நோக்காலும், வாக்கு, மனம், மேனி உண்டாவது, தும்பிக்கை யான் பாதம் சார்வார்க்கேயாம். சார்தல் எப்படி? சார்தல் என்ருல் இடைவிடாது சேர்தல் என்பதாம். திரிகரணங்களும் நல்லவாதல் வேண்டுமானுல் திரிகரணங்களாலும் சார்தல் வேண்டும். சார்தல் என்பது கருமச் சார்பு என்றும் கருமமல்லாச் சார்பு என்றும் இரண்டு வகைப்படும். தூணைச் சார்ந்தான் என்ருல் தூணைத் தன் உடம்பு தொடும்படி சேர்ந்தான் என்று நினைக்கிருேம். இப்படி ஒன்ருேடொன்று தொடும்படிச் சேர்வதே கருமச் சார்பாம். அரசனைச் சார்ந்தான் என்ருல் அரசனைத் தன் உடம்பு தொடும்படி சேர்ந்தான் என்று எண்ணுமல், அவன் மனம் பற்றும் வகையில் சேர்ந்தான் என்று எண்ணுகிருேம். இச்சார்பு கரும மல்லாச் சார்பாகும். இவ்விரண்டு வகைச் சார்பாலும், நம் மூன்று கரணங்களும் தும்பிக்கையான் பாதம் சார்தல் வேண்டும். உடம்பால் சார்தல் கருமச் சார்பாகவும், வாக்கு மனங்களாற் சார்தல் கருமமல்லாச் சார்பாகவும் கொள்க.

பூக்கொண்டு சார்தல் உடம்பின் தொழில். பூக்கொண்டு அர்ச்சித்து வழிபடுவது உடம்பாகிய கரணத்தால். திருவடியையும் திருமேனியையும் புகழ்ந்து போற்றி வாழ்த்திச் சார்வது நாவாகிய கரணத்தால். நினைத்துச் சார்வது உள்ளமாகிய கரணத்தால். இத்திரிகரணங்களும் தப்பாமல் சார்தல்

வேண்டும். (தப்பாமல்–விதித்த முறை தவருமல்) அதாவது ஆகம விதிப்படி யொழுகும் வழிபாட்டில் அவ் விதிமுறையில் தவறு நேராதபடி சார்தல் வேண்டும். உடம்புக்குத் தவறு விஞன தொழில் செய்தல். வாய்க்குத் தவறு பொய், புறங் கூறல் முதலியன. மனத்துக்குத் தவறு அழுக்காறு, அவா, வெகுளி முதலியன கொள்ளுதல். இம்மூன்று தவறுகளையும் மூன்று காரணங்களால் போக்க வேண்டும். உடம்பின் தவறு பூக்கொண்டு அர்ச்சித்தலால் போக்கப் படல் வேண்டும். வாக்கின் தவறு இறைவனைத் துதித்தலால் போக்கப்படல் வேண்டும். மனத்தின் தவறு திருவடித் தியானத்தால் போக்கப்படல் வேண்டும். இத்தவறுகளை யெல்லாம் அழுக்கு என்றும், போக்கும் குணங்களை நீர் என்றும் கொண்டும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறிய பாடல் இங்கு நினைவுக்கு வருகின்றது.

" திருக்குறும் அழுக்கா றவாவொடு வெகுளி
செற்றமா கியமன வழுக்கைத்
தியானமென் புனலால் பொய்புறங் கூறல்
தீச்சொல்என் கின்றவா யழுக்கை
அருட்கிளர் நினது துதியெனும் புனலால்
அவத்தொழில் என்னுமெய் அழுக்கை
அருச்சனை யென்னும் புனலினுற் கழுவா
அசுத்தனேன் உய்யுநா ளுளதோ''.

என்பது அவர் வாக்கு. இப்படியாக மூன்று கரணங்களாலும் தும்பிக்கையான் பாதத்தைச் சார்வார் தமக்குக் கலைமகள், மலர் மகள், இருவரது அருள் நோக்கும் உண்டாகும். அதனுல் நல்ல வாக்கும், மனமும், காயமும் உண்டாகும்.

இதுகாறும் கூறிய வற்ருல் விநாயகப் பெருமானைத் தம் திரிகரணங்களாலும் சார்வார்க்குத் திரிகரணங்களும் எல்லா வற்ருலும் நல்லனவாகும் என்பதும் அந்நலம் பெற்ருல் இம்மை மறுமை (எழுமை) வீடு ஆகிய மும்மை நலமும் செம்மையின் எய்தும் என்பதும் உணரலாகும்.

சமுதாயக் கவிஞன்

திரு. ஆறு. அழகப்பன், அவர்கள், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலைநகர்.

பாட்டுகொரு புலவன் பாரதியாரின் இறுதிப் பயணத்தில் எண்ணக் கூடிய சிலரே கலந்து கொண்டனர் என்ற செய்தி இன்றைக்கு அவர் பெயரால் விழாக்கள், சங்கங்கள், கூட்டங்கள், நடத்துபவர்களுக்கு வியப்பானதாகவே இருக்கும். ஆனல் இன்று பாரதியார் சங்கப் புலவர்களை விட அனைவரும் அறிந்த ஒரு பெரும் புலவராக விளங்குகின்றுர். இதற்குக் காரணங்களும் உண்டு. காதல், வீரம், கொடை, கதை, நீதி, சமயம் போன்றவைகளில், ஏதாவது ஒன்றினை மட்டும் பாடிப் புகழ் பெற்ற தமிழ்ப் புலவர் உலகில் சில கவிஞர்கள்தான் பலவற்றையும் பாடுபவர்களாக இருந்தனர். இவ்வகையினைச் சேர்ந்தவர்களாக நம் நூற்றுண்டுப் புலவர்களான கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் ஆயோர் விளங்குகின்றுர்கள். இம் முப்பெரும் புலவர்களில் கவிமணியின் பாடல்கள் நீராகாரத்திற்கும்; பாரதியாரின் பாடல்கள் மோரினுக்கும், பாரதிதாசனின் பாடல்கள் கெட்டித் தயிரினுக்கும் ஒப்பாகச் சொல்லத் தக்கவை எனலாம்.

பாடல் வகை

பாரதத்தாய் அடிமை விலங்கு பூட்டப்பட்டிருந்தமையால் மக்களுக்கு ஏற்பட்ட விடுதலை உணர்ச்சி பாரதியாரின் பாடல்களில் தேசியப் பாடல்களுக்கு ஒரு தனி இடத்தைத் தேடித் தந்தன. இந்தி மொழியால் தமிழ்மொழி அடிமைப்பட்டு விட்டடது என்ற தமிழியக்கத்தால் அவருடைய தமிழ் மொழிப் பாடல்கள் தமிழ் அறிஞர்கள் நாவிலும் அவையிலும் சிறப்பிடம்

பெற்றன. அவருடைய கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் திறனாய்வாளர்களால் பெரிதும் சீராட்டப்பட்டன. அவருடைய வேதாந்தப் பாடல்கள் தத்துவ ஆய்வாளர்களால் மட்டும் போற்றப்பட்டன. அவருடைய வசனம், கதைகள், ஆகியவைகள் அவருடைய பிறந்ததின விழாவில் பெயருக்குத் தொட்டுக் காட்டும் படியாகவே அமைந்தன.

ஆனால் பாரதியாரின் கவிதை மதிப்பீட்டில் முன்னிலையாக நிற்கவேண்டிய சமுதாயத்தைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் ஏனோ உரிய நிலை அடையாது போய்விட்டது?

பாரதிக்கு முன்

பாரதியாருக்கு முன் நாட்டுணர்ச்சியை இம்மண்ணில் மக்களுக்கு ஊட்டிய தேசியத் தலைவர்கள் பெரும் அளவில் வாழ்ந்தனர். தமிழ் மொழியின் அருமையினைத் தூதாகப் பாடிய புலவர்களும், தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடிய புலவர்களும் பாரதியார் தமிழ் மொழியைப் பாடுவதற்கு முன்னே பாடியிருக்கின்றனர். வேதாந்தம், பாரதியார் காலத்திற்கு முற்பட்ட பழமையானது. அவரது முப்பெரும் பாடல்களை யொத்த, அல்லது அவற்றைவிட உயர்ந்த தொடர்நிலைச் செய்யுள்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல உண்டு. ஆதலின் பாரதியார் தம் காலத்திற்கு முன் இருந்தவைகளைப் பாடிய பாடல்களைக் காட்டிலும் அவர் காலச் சமுதாயத்தை நினைத்துப் பாடிய சமுதாயப் பாடல்கள் ஏனைய துறைப் பாடல்களை விட சிறப்பாகக் கருதத்தக்கனவாம்.

(அடுத்த இதழில் முடியும்)

அருள்விளை பெருஞ்சீர்

திரு. பொ. முத்தரசு அவர்கள், M. A., B. T.,
தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லூரி,
அருள்நந்திநகர் – ஸ்ரீவைகுண்டம்,

கல்லாட நூலின் ஐந்தாவது பாடல் "இளமை கூறி மறுத்தல்" என்னும் துறையைச் சார்ந்தது. இது சேட்படை என்ற பகுதியின் பாற்படும். தலைமகன் மடலேறுதலைத் தடுக்கும் பொருட்டு, அவன் குறையைத் தலைவிக்குச் செவ்வியறிந்து அறிவித்துக் குறைமுடிப்பதாக ஏற்றுக் கொண்ட தோழி, அவன் களவொழுக்கத்திலேயே நீடிப்பதை விலக்க முயலுதல் சேட்படை எனப்படும். சேட்படை என்பது அகற்றல் அல்லது விலக்குதல். தலைவனைத் தலைவியிடமிருந்து அகற்றுதலோ விலக்குதலோ தோழியின் நோக்கமன்று. இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் களவொழுக்கத்தில் கருத்துடைய தலைவனுக்குத் தலைமகளது பெருமையும் தான் மேற்கொள்ள விருக்கும் முயற்சிகளுக்குள்ள இடையூறுகளும் இனிது புலப்படுதல் வேண்டும். அதனால் இத்துணை அருமையும் பெருமையும் உடையவளைக் களவிற் சேர எண்ணாது விரைந்து மணந்து கொள்ளுதலே நேரிது என்ற முடிவுக்குத் தலைவன் வருதல் வேண்டும். அதற்காகத் தோழி தன் திறமையாலும், சொல்லாற்றலாலும் தலைமகன் மனம் நோகாதவாறும், அவன் இயல்புக்கு இயையும் வகையிலும் ஏற்பன எடுத்துக்கூறிக் களவொழுக்கத்தினின்றும் பலவகையாலும் அவனை விலக்க முற்படுதல் "சேட்படை" என்று அகப்பொருள் இலக்கணத்தில் கூறப்படும். அவ்வாறு விலக்க முயல்கின்ற தோழி, தழையும் பூவும் கையுறையாகக் கொணர்ந்து, அவற்றைத் தலைவி ஏற்குமாறு செய்ய வேண்டி நிற்கும் தலைவனிடம் "எவ்வகையால் நோக்கினும், தலைவி வயதும் பருவமும் எய்தாத இளஞ்சிறுமி யாதலின், தலைவன்

கூறும் செய்தி அவளுக்குச் சிறிதும் இயைபுடையதன்று'' என்று மறுத்துரைத்தலே இப்பாடலின் திரண்ட கருத்தாகும்.

உருகும் உள்ளத்துப் பெருகும் ஒளி.

இப்பாடலில் கல்லாடர் விளக்க எடுத்துக் கொண்ட திருக்கோவையார்ச் செய்யுள் வருமாறு:

உருகு தலைச்சென்ற உள்ளத்தும் அம்பலத் தும்ஒளியே
பெருகு தலைச்சென்று நின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா முலைபொடியா
ஒருகு தலைச்சின் மழலைக்கென் னோ?ஐய! ஓதுவதே.

"அன்பால் குழைந்து உருகுகின்ற மெய்யடியார் நெஞ்சத்திலும் அழகிய சிற்றம்பலத்திலும் ஒப்பத் திருவருள் ஒளி என்றும் பெருகுமாறு நின்றவன் எம் பெருமானாகிய சிவபெருமான். அவன் எழுந்தருளியுள்ள திருப்பெருந்துறை என்னும் ஊரில் வாழ்கின்றவள் எம்பெருமாட்டியாகிய தலைவி. இவள் இன்னும் பிள்ளைமைப் பருவம் கடவாதவள்; தேன்பொருந்திய நறுமணம் நிறைந்த இவள் கூந்தல்கள் இன்னும் ஒருசேர முடிக்கப்படும் அளவிற்கு வளரவில்லை; மார்புகள் அரும்பவில்லை; பொருள் விளங்காதனவும் வடிவம் பெறாதனவுமாகிய சில சொற்களையே மெல்ல மெல்ல மிழற்றும் இளம்பருவத்தினளாய் இருக்கின்றாள்; இத்தகையவளுக்கு நீ கூறுகின்ற செய்தி சிறிதும் பொருத்தமுடையதன்று."

பாடற் பொருள் :

இங்ஙனம் தலைவனிடம் மறுத்துரைக்கும் தோழி உண்மையறியாதவளல்ல. அவள் கூற்றைக் கேட்கும் தலைவன், அவள் இவ்வாறு பேசுவதன் நோக்கத்தைச் சிந்திப்பான்; சிந்தித்துத் திருமணத்துக்கான தக்க வழிகளை நாடுவான்; என்பது குறிப்பு. இதனை விளக்கப் புகும் கல்லாடர், கோவையார்ப் பாடலில் பிள்ளைமைக் குறிப்புக்களாக உள்ளனவற்றை அழகிய உவமைகளால் விரித்துத் திறம்படக் கூறுகிறார். மேலும் கூடற்பெருமான் புகழ் கூறுமுகத்தால் திருமாலுக்கு ஆழிப்படையை அருளியதை நரசிங்கப் பெருமானது தோற்ற வரலாறு கூறுவதன் வாயிலாக உணர்த்துவது புதுமையும், வேறெங்கும் காணப் பெறாத சிறப்பும் உடையதாக விளங்குகிறது.

தூணம் பயந்த மாணமர் குழவி:

சிறு குழந்தைகளுக்குக் கிலுகிலுப்பை போன்ற விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்தல் பெற்றோர்க்கு இயல்பு. இப்பாடலில் நரசிங்க மூர்த்தியைக் குழந்தையாகவும், அவர் வேண்டிய ஆழிப்படையை விளையாட்டுப் பொருளாகவும், அவர் இரணியனைக் கொல்லத் தோன்றிய தூணை, நரசிங்கக் குழந்தையைப் பெற்ற தாயாகவும் உருவகப் படுத்தியிருத்தல் வேறெங்கும் காணப் பெறாத புதுமையே. தூணைத் தாயாக உருவகப் படுத்தும் போது ஒரு பெண் கருக்கொள்ளும் சூழ்நிலையையும், கருக்கொண்ட காலத்து அவள் வயாவும் வருத்தமும் அடைதல், புளியும் மண்ணும் சுவைத்துத் தின்ன விரும்புதல், அவள் வாய் வெளுத்தல், கண்குழிதல் போன்ற மெய்ப்பாடுகளையும் அருமையாக எடுத்துக் கூறுகிறார். ஆனால் இத்தகைய மெய்ப்பாடுகளுள் எதனையும் எய்தாது, ''திசைதிறந் தண்டம் கீறச் சிரித்த செங்கண்'' சீயத்தைத் தூணாகிய தாய் குழந்தையாகப் பெற்றெடுத்தாள் என்பது வியப்பாக இல்லையா? இதனினும் வியப்பு அந்தக் கற்றூண் பெற்ற குழவி அரக்கர் கூட்டத்தோடு போரிட்டு விளையாட விரும்பியதும் அவ்விளையாட்டில் பயன் படத்தக்க கருவியாக தீயை உமிழ்கின்ற ஆழிப்படையை வேண்டியதும் ஆகும். அதனினும் வியப்பு, அப்பொல்லாத குழந்தை வேண்டிய வாறே அப்படையை வழங்கியதும் ஆகும் வேண்டுவார் வேண்டியதை அவர் விரும்பிய வண்ணம் காலமறிந்து வழங்கும் பெருமான் கூடல்மாநகரில் எழுந்தருளியிருக்கும் ஆலவாய் அண்ணல். அப்பெருமான் பாண்டிய மன்னன் வேண்டுகோளுக்கேற்ப வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடியருளினான் என்றால் அவன் அடியார்க்கு எளிவரும் தன்மையை என்னென்று இயம்புவது?

அருள்விளை பெருஞ்சீர்:

ஆலவாய்ப் பெருமானின் அருள் ஒருவர்க்குக் கிட்டவேண்டுமாயின், அவர் அவ்வருளைப் பெறுதற்கு வேண்டிய பெரிய தவத்தினை முன்னமேயே செய்திருத்தல் இன்றியமையாதது. அவன் அருளாலேதான் அவன் தாள் வணங்கல் கூடும். ஆயினும் அவ்வருளைப் பெறுதற்கு நாம் எவ்வகையினும் முயலா

திருத்தல் பொருத்தமாகுமா? நாம் நம்மாலான முயற்சியை இடைவிடாது தொடர்ந்து செய்துவருதல் வேண்டும். அம் முயற்சியின் விளைவு அவன் அருள் நமக்குக் கிட்டுதல். அவ் வருளைப்பெறும் சீராகிய தவம் இல்லாதார்க்கு வெளிப்படை யாகத்தோன்றிய அமுதமும் பயனற்றுப் போகும். அத்தகை யோர்க்கு மெய்ப்பொருள் இன்னதெனத் துணியும் தெளிவும் ஆற்றலும் இராதாகையால் அவர்க்கு அது விளங்காது. இதனைக் கல்லாடனார் கூறும்

கூடல் மாநகர் ஆட எடுத்த
விரித்த தாமரை குவித்த தாளோன்
பேர்அருள் விளையாச் சீர்இலர் போலத்
துலங்கிய அமுதம் கலங்கியது

என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

தோழி கூறுவது:

இவ்வாறு ஆலவாய்ப் பெருமானின் அருளைப் பெறுதற்குரிய தவம் இல்லாதார்க்கு, அவர் எண்ணியது கைகூடாது என்று கூறப்புகும் தோழி தலைவனை முன்னிலைப்படுத்தும் போது "சொல்லிய சொல் நிறைவு பெறுதற்கு முன்பு அதன் பயனை விரைந்து முடித்துவிடும் வேலை ஏந்திய வீரனே!" என்று அழைக் கிறாள். இதனால் அவன் செயல்திறம் மிகுந்தவன் என்பதனை நினைவூட்டிக் கொண்டு தன் கருத்தை வற்புறுத்த முற்படுகிறாள்.

"தவம் இல்லாதவர்க்கு மெய்ப்பொருள் விளங்காதது போலவும், தெளிந்த நீர் கலங்கிவிட்டது போலவும் என்தோழி கூறுகின்ற மழலைச் சொற்களின் பொருள் தெளிவாக விளங் காது; முருந்தின் வரிசை போன்ற பற்களைத் திறந்து காதற் குறிப்புடன் அவளுக்குச் சிரிக்கத் தெரியாது; கடவுட் பற்றில்லாதாரது இருண்ட நெஞ்சம் ஒருவழிப்படாதது போல அவளுடைய கூந்தல் முடிப்பதற்குப் பொருந்துவதில்லை; காதல் துணையாகிய இரட்டை மீன்களின் பார்வையில் அவற்றின் முட்டைகள் குஞ்சுகளாகி விடுதல் போல, கருதிய பயனைக் காதலன் நெஞ்சத்தில் தோற்றுவிக்கும் கூரிய நோக்கத்தினை இவள் கண்கள் பெறவில்லை; ஒரு வேந்தன் காலங்கருதிப் பகையை நெஞ்சினுள் அடக்கிவைத்திருத்தல் போல,இவளுடைய

மார்புகளும் கொலைத் தன்மையை உள்ளடக்கி இன்னும் அரும்பித் தோன்றவில்லை; செம்மையான இயல்புடைய என் தோழியின் தன்மை இதுவாயிருப்பதால் நீ குறையிரத்தலோ, இங்கு அடிக்கடி வருதலோ, பயனில்லாத செயல்களாம்; எனவே அவற்றை அருள்கூர்ந்து தவிர்வாயாக.''

கல்லாடர் கருத்து:

"அண்டமும் அளவிலாத உயிர்களும் ஆகமாகக் கொண்ட" ஆலவாய் அண்ணல் தூணம் பயந்த மாணமர் குழவி, பேணி வழிபடற்குரிய தந்தை என்பதைக் கூருமல் கூறி விளக்கும் கல்லாடனுர் திறம் போற்றிப் பாராட்டி மகிழற் பாலது. கூடல் மாநகரில் ஆடிய பெருமான், கால்மாறி ஆடினுன் என்று குறிப்பிட விரித்த தாமரை குவித்த தாளோன் என்றுரைக்கும் நுட்பத் தைக்காண்க. ஊன்றிய திருவடி விரித்த தாமரை போல்வது. எடுத்த திருவடி குவித்த தாமரை போல்வது. மதுரையில் இவற்றை மாற்றி ஆடியருளினுன் என்பதைப் புலப்படுத்தும் வாயிலாக உயிர்த் தொகுதியின் ஈடேற்றம் நோக்கி, ஆக்கலும் அழித்த லும் மாறிமாறிப் புரிந்தருளும் அண்ணலின் பெருமையை இயம் பும் திறம் எண்ணத் தொலையா இன்பம் தருவதாகும்.

தலைவியின் இளமைப் பண்பை உவமை வாயிலாக விளக்கு கின்ற கல்லாடனுர், கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிகின்ற ஐம்புலனும் கொண்டுணரும் இன்ப வாழ்க் கைக்கு உரிய செவ்வி அவளிடம் இல்லை என்பதை நயம்படக் கூறுகின்ருர். கண்ணும், சொல்லும், முறுவலும், கூந்தலும், ஆகமும் தலைவன் விழையும் பயன் தருவன அல்ல என்று உவமை யொடு சார்த்திக் கூறுவதன் வாயிலாக மேற்காட்டிய ஐம்புல இன்பங்களும் இல்லை என்பது தெளிவு. எனவே வயதும் பருவ மும் வாயாத, இளமையுடைய தலைவியை நாடிவந்து குறை யிரத்தல் செயல்திறம் வாய்ந்த தலைவனுக்கு ஏற்புடையதன்று என்று, தோழி இடித்துணர்த்துகிருள். இங்ஙனம் பயன் விளை யாத வெறுஞ் செயல்களில் ஈடுபட்டுப் பொழுதைக் கழிப்பதினும் பயனுடைய நல்வினைகளில் ஈடுபட்டுச் செயல் வீரனுகத் திகழ முற்படுதலே அவன் கடமையென உணர்த்தும் தோழியின் சொல்லாற்றலுக்கு இணை வேறு எதுவும் இல்லை.

மதிப்புரை :

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

விளக்கவுரையாசிரியர்:

பேராசிரியர். பாலூர் கண்ணப்ப முதலியார் M. A., B. O. L.,

பத்திச் சுவை நனி சொட்டவும், ஏனைய காவியச் சுவைகள் யாவும் ஒருங்கு பொதுளவும் மெய்யடியார்களின் வரலாற்றுப் பெருங்காவியமாகிய திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளிய அருண்மொழித்தேவராம் சேக்கிழார் பெருமான் மீது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியுள்ள பிள்ளைத் தமிழ் நூலுக்குச் சிறந்ததோர் விளக்கவுரை இயற்றியதன் வாயிலாகச் சைவத்துக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் பேராசிரியர். பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் மிகப் பெரிய தொண்டு செய்திருக்கின்றார்கள். பாம்பின் கால் பாம்பறியும் என்பதற்கேற்பச் சேக்கிழார்பெருமானின் பலதிறச் சிறப்பியல்புகளையும் ஆழ்ந்துணர்ந்து தெளிந்து வியந்து பாடிய மகாவித்துவான் அவர்களது கருத்துணர்ந்து, உரைநலங்கள் பலவும் அமைய இப்பெருவிளக்கம் இயன்றுள்ளது என்றால் அது மிகையன்று. திருமுறைகளின் தெய்வ நலத்தையும், சித்தாந்தப் பெருநூல்களின் திட்பநுட்பச் சிறப்பையும், தமிழ் இலக்கிய இலக்கணங்களின் தனிப்பெரும் வளத்தையும் ஒருங்கே ஓரிடத்துக் காணவிழைவார்க்கு, இவ் விளக்கவுரை ஒரு பெருங்களஞ்சியமாகும். அன்பர்கள் இதனை வாங்கிப் படித்துப் பயன்துய்ப்பார்களாக.

வெளியிடுவோர் :

திருப்போரூர், கந்தப் பெருமான் தேவத்தானம்.

824—பக்கங்கள். விலை ரு. 12-00.

துணை மாலையம்மை பிள்ளைத் தமிழ்க் கவிநயம்

திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள், B.A., B.T.
அறநிலைய உதவி ஆணையர், இராமநாதபுரம்,
மதுரை.

முகவுரை

“ புன்னைவன நாதர்மனை மன்னு துணைமாலை
பொன்னூச லாடி யருளே.

திருச்சுழியல் துணை மாலையம்மை பிள்ளைத் தமிழ் என்னும் இவ்வரிய நூல் பாண்டி நாட்டுத் தேவாரம் பெற்ற திருத் தலங்கள் பதினுன்கனுள் ஒன்ருகிய திருச்சுழியலில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அம்பிகையைக் குழந்தையாகப் பாவித்துப் பத்துப் பருவம் பாடப் பெற்றதாகும். ஆசிரியர் திருப்பெயர் அறியப் படாததும் நிறைவாகாததும், சொற் பொருணலங் கனிந்ததுமான இந் நூலை உயர் சைவத் திருவாளர் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A., அவர்கள் 1939-ஆம் ஆண்டு முதற் பதிப்பாக வெளியிட்டார்கள். இப்போது கோவைக் கவியரசு கு. நடேசக் கவுண்டர் அவர்களால் இந்நூலில் எஞ்சிய செய்யுட்கள் பாடப்பெறறு முழுமை பெற்றுப் பொலிகின்றது. விரைவில் வெளிவர இருக்கின்றது.

காப்புப் பருவம் முதல் வருகைப் பருவம் 4-ஆம் செய்யுள் வரை பாடிய ஆசிரியர் இன்னுர் என்று அறியப் படாவிடினும் அவர் மிகச் சிறந்த கவிஞர் என்பதும் குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்களில் மிகுபயிற்சி யுடையார் என்பதும் செவ்வனே விளங்குகின்றன. அரிய சில சொல்லாட்சியாலும் சந்த அமைப்புக்களாலும்; வளமான அடைமொழி அடுக்குகளாலும்; பிறவற்ருலும் குமரகுருபர சுவாமிகள் அருளிய பிள்ளைத் தமிழ் நூல்களை ஒத்தியலுகின்றன இவர் தம் செய்யுட்கள் என்பது தேற்றம்.

சில நயமான பகுதிகள்

அம்பிகையாகிய ஒரு பசியகொடி திருமேனி நாதரின் ஒரு பாகத்தே படர்ந்து பல உறுப்புக்களிலே பலவகைப் பூக்களைப் பூத்துத் திருவயிருகிய தளிரிலே எண்ணரிய பகிரண்டங்களை யெல்லாம், காய்த்து, பசியதாளின் கீழே அறிவு, போகம், முத்தி யாகிய, முப்பழங்களையும் பழுத்தது என்னும் பொருள் தரும்படி அமைந்த, ''தேர் கொண்ட மணிவீதி....துணை மாலையாம் பைங் கொடியை இனிது காக்க'' என்னும் காப்புப் பருவம் இரண்டாம் செய்யுள் மிக்க இன்பந்தருவதாம்.

துணைமாலை என்னும் இத்தலத்து அம்பிகையின் பெயர்ப் பொருளை வரிசையாக அமைப்பவர் போல ''மாலுக்கும், மன்னு யிர்க்கும், மகிழ்நற்கும் இன்னுயிர்த் துணையான துணைமாலை'' என்னும் அடிகள்; திருமாலுக்குத் தங்கை, உயிர்களுக்குத் தோன்ருத் துணையாயிருந்து காப்பவள், சிவனுக்குத் தேவி என்னும் பொருள்தந்து மகிழ்ச்சி விளைக்கின்றது [காப்புப் பருவம் 12-வது செய்யுள்].

மலையரையன் மனைவி காஞ்சனமாலை, அம்மையை நீராட்டி, திருநீற்றுக் காப்பும் பொட்டும் இட்டு, ஆடை உடுத்து, அணி திருத்திப் பாலூட்டி, மடியில் வைத்துச் சீராட்டி மகிழும் செய்தி யைக் கூறும் செங்கீரைப் பருவம் முதற்செய்யுள் மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் செங்கீரைப் பருவ முதற் செய்யுளாகிய

"நீராட்டி ஆட்டுபொற் கண்ணந் திமிர்ந்தள்ளி
.... முத்தாடும் பசுங்கிள்ளை"

என்னும் திருச்செய்யுளை நினைப்பிக்கின்றது.

அம்பிகை செல்வக் குடியிலே பிறந்த ஒரு பெண்ணணங்கு; அட்டமாசித்திகள் அவளுக்குத் தோழியர்; பிரமனுகிய குயவன் அவள் சிற்றில் இழைத்துச் சிறுசோருக்கப் பானையை நல்கு கின்ருன்; அவள் அப்பானையிலே நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறவியுடைய எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதமாகிய அரிசியையிட்டுச் சமைக்கின்ருள். திருமால் அச்சோற்றுக்குக் காவல் புரிகின்ருன். அம்பிகை தான்

சமைத்த சோற்றைக் கணவனுக்கு மகிழ்வோடு படைக்க அவன் உண்டு களிக்கின்ருன். [சங்காரம் செய்கின்ருன்] இக்கருத் தமைந்த 15-ம் செய்யுள்,

"முதண்ட கூட முடும் சிற்றில் விளையாடுமொரு
பச்சிளம் பெண்பிள்ளை"யின்

விளையாட்டைக் கூறும் மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்ச் செய் யுளை நன்கு சுவைத்ததன் பயனே ஆகும்.

சோலைகளாகிய பூம்பந்தரில் தவளை முழவொலிப்ப, சங்கம் முழங்க, வண்டுகள் சதுமறை யிசைப்ப, குரங்குகளுண்ணும் தேமாங்கனியின் சாருகிய நெய் மாவிலை வழியாகத் தாமரை யாகிய தீயில் விழ, தாமரைப்பொய்கையாகிய திருமண வீட்டிலே அன்னங்கள் வதுவை செய்யுங் காட்சியை ஒவியமாகத் தீட்டிக் காட்டும் "பாலிற் கமுகெழும்" என்னும் 30-ம் செய்யுள்,

"பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீள் இலைக்கடையில் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்கும் தகையவென மணந்துளதால்"

என்னும் சேக்கிழார் பாடற் கருத்தை உட்கொண்டு மேலும் கற்பனைவளம் தோன்ற நிற்கின்றது.

இத்தகை நல்லதொரு நூல் முழுமையாக அகப்படாததால் ஏற்பட்ட குறையைப் போக்கி அதனை நிறைவு செய்து தந்த பெரியார் கோவைக் கவியரசு கு. நடேச கவுண்டர் அவர் களாவர். அவர் தமிழ் நாடு, சிறப்பாக கொங்கு நாடு செய்த மாதவத்தால் தோன்றியவர். தமிழும் வட மொழியும் வல்லவர். நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தரின் பொற்றிரு வடிக்கே புந்தி வைத்தவர். மணிமாமன்றில் நடஞ்செயும் பதத்தே காதலாகிக் கசிந்துள் உருகும் நலந்தானுடைய நற்றிருவாளர். பன்னூறு மாணவர்க்குத் தமிழ்க் கொடை நல்கிய மேதவமிக்க போதகா சிரியர். சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருவெம்பாவை திருவம் மானை முதலியவற்றுக்கு நல்லுரை கண்ட பேருரைகாரர். "நுண் பொருள் ததும்பிட நறுங்கவி நினைத்தளவில் நுவல வல

பாவலர்." "எட்டிக்குடி முருகன் தமிழ்" "சுவாமி நாதசாமி பிள்ளைத் தமிழ்" மங்கையர்க்கரசி பிள்ளைத் தமிழ்" இயற்றிய பிள்ளைக் கவிச் சிங்கம் இவர். அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமுங் கொண்டு, மலையே அனைய மாட்சிபடைத்தவர். எந்தம் உழுவல் அன்பர். கவியரசு அவர்கள் பாடிய இப்பிள்ளைத் தமிழ்ப் பருதியிற்காணும் நயங்கள் சில:—

"கார்மேக படலமன" எனத் தொடங்கும் செய்யுள் (வருகை-5) அம்மையை ஓர் பெண் யானையாக உருவகப்படுத்திப் பாதாதி கேசவருணனை அமைந்து கம்பீரமான ஓசையோடு திகழ்கின்றது.

"எங்கேனும் யாதாய்ப் பிறந்திடினும் அடியார்கள்
இடருற்ற போதிரங்கி
இங்கே எனச் சொல்லி முன்னிற்பன் இறைவன்"

என்னும் 59-ம் செய்யுள்,

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்
கிங்கேயென் றருள் புரியும் எம்பெருமான்"

என்ற எங்கள் தமிழ் விரகர் தேவாரப் பாசுரத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் பரமசிவம் சக்தியொடு கூடிய வழியே உயிர்களுக்கு அருள் செய்தல் முதலிய எத்தொழிலும் செய்ய இயலும் என்னும் சித்தாந்த உண்மையையும் அச்செய்யுள் விளக்கு கின்றது. இக்கருத்துப் பின்னும் பல செய்யுட்களில் ஆசிரியரால் விளக்கப்படுகின்றது. எங்கே வெம்மை தோன்றினும் அது நெருப்பின் குணம் என்று அறிதல் போல யார் எங்கே எவருக்கு அருள் செய்தாலும் அது அம்பிகையின் குணம் என அறிதல் வேண்டும் என்பதை விரிவாக உதாரணத்தோடு விளக்கும் "பெருகு நினது உருவமெனும் நின்ற கருணை" எனத் தொடங்கும் 61-ம் செய்யுளும்,

"தேவரில் தலையாய மூவரிப் புவனம்
செனிப் பித்தளித்தழித்தல்
தேவியிவள் சீபாத தூளி கொண்டென்ன நூல்
செப்புவது தெளிகிலாயோ"

எனும் 73-ம் செய்யுளும் காண்க. (அடுத்த இதழில் முடியும்)

பழனி முருகன் பிள்ளைத் தமிழ்

பேராசிரியர்: திரு. E. S. வரதராஜய்யர், அவர்கள் B. A.
பூனா.

[மலர் 16. இதழ் 2-ன் தொடர்ச்சி]

சப்பாணிப் பருவம்

திருவாரும் வனமீதில் உழைவயி றுளைந்தீன்ற
சேயிழைதன் செய்தி கேட்டுத்
தீராத காதலொடும் அவள் காவல் செய்தருள்
தினைப்புனம் விரைந்து தேடி
வெருவாத நெஞ்சினர்கள் வேடுவர்கள் முன்பொரு
விருத்தனெனவே நடித்து
மின்னா ரிடங்குமர னென்னவனை யோதுவன
வேடர்வர வேங்கை மரமாய்
மருவார் மலர்க்குழலி வல்லிதரு தினைமா
வயின்றருளி நீரருந்த
வண்சுனை யடைந்தடி வழுக்குற விழிந்து குற
வனிதையிடம் வம்பு பேசித்
தருவாகு விகடனருள் தாவளி மணந்தவா
சப்பாணி கொட்டியருளே
சம்புகுரு நாதனே பழனிவளர் சண்முகா
சப்பாணி கொட்டியருளே 4

முத்தப்பருவம்

கடலின் நஞ்சினை அமுதெனக் கொண்ட
கடவுள்நுதல் விழிப்பொறி
கவின் சரவணத் திட வுதித்தருள்
கந்த அறுமுகத்தனே

அடல வுணர்கள் பலரு மடிய
வமர ரிடர்கள் பொடிபட
அயிலினைப் பணி கொண்டே யெண்டிசை
அகில மீதொளி கொண்டனை
நடலை தவிர்ந்து திடமுளுறவுன்
நளினபதமே கதியென
நம்பும் அடியர் வம்புடலினில்
நலிதல் ஒழிய அருள்வையே
முடமதி மலை யரற்கரும் பொருள்
மொழிவை தருக முத்தமே
முகிழ் நகைவளி மகிழ்ந பழனி
முருக தருக முத்தமே. 5

வருகைப் பருவம்

போதா வருக அயற்குண்மை
புகன்றாய் வருக உமைமகிழும்
புதல்வா வருக புழைக்கையற்பின்
புகுந்தாய் வருக புராரிகுரு
நாதா வருக சுரரிடர்க்கோர்
நாவாய் வருக நான்மறைதேர்
நம்பா வருக நவவீரர்
தலைவா வருக நலமருளும்
நீதா வருக மயிலேறும்
நேயா வருக நினைப்பவர்தம்
நிதியே வருக அயிலேந்தி
நிற்பாய் வருக நிமலர்துதி
பாதா வருக பாவைவளி
பங்கா வருக வருகவே
பழனி மலைப்பூ பதியான
பரமா வருக வருகவே. 6

(தொடரும்)

தாயுமானவரின் — பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

19

The great Tamil Poet Thiruvalluvar in his Master-Piece Tirukkural says 'one can certainly cross over the ocean of births, of he attains the feet of God.' Almost all theistic religions of India stress the state of birthlessness as the goal and salvation of the Souls. And so St. Thayumanavar implores to the Lord, the state of birthlessness in all his songs. Here he describes the afflictions and distress at the time of Soul's departure from the body and also expresses the ills of life that one has to undergo if born on the earth. To get away from all these torments, turmoils and sorrows, he seeks the help and protection of the Lord of eternity-ie Siva.

வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனையடைந்தேன் ஐயா பராபரமே.

(பொ — ரை) இறுதிக் காலத்தில் இறப்பினைக் கொண்டு வரும் காலன் தரும் வாதனைக்கும் இந்த உலகத்தில் பிறந்து அனுபவிக்கும் துன்பத்திற்கும் அஞ்சி நான் உன்னிடம் சரண் புகுந்திருக்கின்றேன்.

Oh...Lord Supreme! with all my meanness, I surrender myself to you to protect me from the troubles of life and the tortures inflicted by the god of death at the final hours.

———

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

உ

SIVA SIVA

Rajah of Kalahasti Memorial Additional Feeding Charity at Rameswaram Rs. 20,000/-

This endowment is created by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Kasimutt, Tirupanandal, Tanjore District in memory of Rajah Srimatha Raja Raja Damarakumara Venkatappa Naidu Bahadur Varu, Rajah of Kalahasti, who made the gift of Chellur village in Kalahasti Taluk, Chittoor District to our Predecessors-in-title Silasri Kasivasi Kumaragurupara Tambiran Swamigal, the seventh in the line of succession, in the year 1707 Salivahana Era, corresponding to A. D. 1785 for conducting feeding charity at Rameswaram as long as the Sun and Moon last.

The Government took over the said village under the Estates Abolition Act 1948, and granted an interim compensation of Rs. 9,355/- in the year 1955 and we founded an endowment (No. 189) for Rs. 10,000/- in the name of the said Rajah of Kalahasti in registered Document dated 18-4-1955 for feeding of Brahmins and poor at Rameswaram.

The Government in 1963 paid an interim payment of Rs. 3529-72 and a final compensation of Rs. 40,029-00 in respect of the said Chellur village in O. P. No. 2040 of 1953 and O. P. No. 134 of 1962 respectively of the Chittoor District Court-Estates Abolition Tribunal-and with that amount, we founded another endowment (No. 334) for Rs. 50,000/- in the name of the said

Rajah of Kalahasti in document dated 27-5-1963 and registered on 4-6-1963 for feeding of Brahmins and poor at Rameswaram.

Now the Government have paid a sum of Rs. 15,161-87 (deficit interim payment Rs. 13,495-93 and interest Rs. 1665-94) in respect of the said Chellur village in I. A. No. 375 of 1964 and O. P. No. 134 of 1962 of the Court of the District Judge (Estates Abolition Tribunal) of Chittoor and this amount has now been invested in Government Securities of 3% Conversion Loan of 1946 to the facevalue of Rs. 20,000-/ as described below and this forms the capital of the present second additional endowment made in memory of the said Rajah of Kalahasti for conducting daily feeding of Brahmins and the poor in our Kasi Mutt building at Rameswaram in addition to the other endowments in force there. This endowment shall be styled as" Rajah of Kalahasti Memorial second additional feeding charity at Rameswaram".

2. Details of Government Promissory Notes are CA. 249165 for Rs. 10,000/- and CA. 249166 for Rs. 10,000/- total Rs. 20,000/-. The administration of the endowment shall vest in us and our successors-in-interest.

The annual interest accruing on the capital shall be utilised for the daily feeding of Brahmins and the poor in our Kasimutt Choultry, Sannadhi Street, at Rameswaram in addition to the other daily feeding charities.

The feeding shall be conducted in accordance with the Thitta Japtha prepared monthly by us and our successors-in-interest which will depend upon the

income derived and the prices of the commodities then prevailing.

The amount may be re-invested from time to time in high interest yielding Government Securities. This amount shall not be diverted to any purpose other than that intended by us. The capital shall stand in our name and our successors-in-interest.

Tirupanandal
Dated 17-1-1965. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered as document No. 4. of 1965 of Book 4 Volume 52 pages 240 to 242 at the Sub Registrar's office, Tiruvadamarudur, on 18th January 1965.

திருப்பனந்தாள் — ஸ்ரீ காசி மடம்

‘திருமுறை வெளியீடுகள்’

			ரூ. பை.
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் ,,	...	0 56
8*	திருக்கோவையார்—பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9	ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1 50
10	,, ,, மூலம் மட்டும்	...	0 56
11	திருமந்திரம் (புதிய பதிப்பு)	...	2 25
12	பதினோருந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1 50
13	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3 00
14	பெரியபுராணம் உரை நடை	...	2 00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0 40
16	அகத்தியர் தேவாரத் திரட்டு (அச்சில்)		
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3 00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2 25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
20	கந்த புராணம் — முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2 75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2 00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3 00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
26	திருக்குறள் — காமத்துப்பால் ,, ஷை 24. 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை	...	1 25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
30	திருக்கைலாய ஞானவுலா — உரையுடன்	...	0 50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0 25
32	கந்தரனுபூதி மூலம்	...	0 13
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0 35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன்	...	0 37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0 10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும்	...	0 37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0 50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 06

Under No. R. No. 1485/57.

Reged No. M. 5574 குமரகுருபரன்

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) ...	0 75
40	தி[illegible] சாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம் ...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் ...	0 50
49	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை ...	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு ...	1 37
53	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு ...	2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ஷை ...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன் ...	0 50
56	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்) ...	0 50
57	திருவாரூர்-திருப்பதுவல்கள் ...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ...	0 10
59	பழமொழித்திருமுறை ...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை ...	0 50
61	Hymns and Proverbs ...	0 10
62	அப்பர்விழா வெளியீடு ...	0 25
63	நவக்கிரகமாண்பு ...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் ...	0 30

மேலே கண்ட நூல்கள் இடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு.
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறை பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -65.